
ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்

மார்கழி
டிசம்பர்—1978



விலை 85 கா

ஸ்ரீராமகிருஷ்ண மடம்,
மயிலாப்பூர் :: சென்னை-600 004.

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்

பரபரப்பும் ஆரவாரங்களும் நிறைந்த தற்காலச் சூழ்நிலையில், மக்களுக்கு மனச் சாந்தியைத் தரும் அருமருந்தாக இந்தப் பத்திரிகை விளங்குகிறது.

தற்கால மக்களின் ஆன்மிக மறுமலர்ச்சிக்கு ஏற்ற வகையில் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் குரலாக ஸ்ரீராம கிருஷ்ண விஜயம் ஒலிக்கிறது.

உங்கள் உள்ளம் உயர, நீங்கள் மேன்மையுற, அவசியம் படிக்க வேண்டிய பத்திரிகை இது.

சந்தா விவரம்

வருட சந்தா (சிறப்பு மலர் உட்பட)	**ரூ. 8**
ஆயுள் சந்தா	**ரூ. 100**
தனிப் பிரதி	**85 காசு**

ஆயுள் சந்தாவை மொத்தமாகவோ, பகுதி பகுதியாகவோ, மாதம் ரூ.10-ஆகவோ செலுத்தலாம்.

ஆயுள் சந்தாதாரர்களாகத் தங்களைப் பதிவு செய்துகொள்ள விரும்பும் வருட சந்தாதாரர்கள், தாங்கள் செலுத்தியுள்ள வருட சந்தாவைக் கழித்து மீதம் உள்ள தொகையைச் செலுத்தி, ஆயுள் சந்தாதாரராகத் தங்களைப் பதிவு செய்துகொள்ளலாம்.

ஒரு வேண்டுகோள்

1. பேரன்பிற்குரிய வாசக அன்பர்கள் தங்களின் சந்தாவைச் செலுத்துவதுடன், மேலும் தமது நண்பர்கள் சிலரையும் சந்தாதாரர்களாகச் சேர்த்துத் தருவது ஒரு நல்ல தொண்டாகும். இதன் மூலம் நமக்கும் மற்றவர்களுக்கும் நாம் நன்மையைச் செய்துகொள்கிறோம்.

2. சந்தாதாரர்களை அதிகப்படுத்துவதில் எங்களால் இயன்ற முயற்சி செய்து வருகிறோம். அன்பர்கள் தங்களின் பங்காக இந்தத் தெய்விகக் கைங்கரியத்தில் கல்வி ஸ்தாபனங்கள், சத்சங்கங்கள் முதலியவைகளுக்குப் பத்திரிகை போய்க்கொண்டிருக்கும்படி செய்யலாம். **இது ஒவ்வொரு மாதமும் தாங்கள் அளிக்கும் மேலான நன்கொடையாகவும், தங்களை ஞாபகப்படுத்தும் சிறந்த வெகுமதியாகவும் அமையும்.**

3. பெரியோர்கள் இந்த வேண்டுகோளைத் தங்களுக்கு ஏதோ சம்பந்தமில்லாதது என்று புறக்கணித்துவிடாமல், மேலும் சந்தாதாரர்களைச் சேர்த்துத் தரும் விஷயத்தில் தங்களால் இயன்ற ஒரு சிறிதளவிற்காகிலும் முயற்சி செய்வார்கள் என்று நம்புகிறோம். **குறைந்தது மூன்று சந்தாதாரர்களையாவது சேர்த்துத் தருவது மிகப் பெரிய ஒரு உபகாரமாக இருக்கும்.** இதன் மூலம் இன்றைய சமுதாயத்தின் சூழ்நிலையில் நல்ல கருத்துகள் வளர அரும்பெரும் தொண்டு செய்தவர்களாகிறீர்கள்.

4. புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பி வைக்கும்போது, புதிய சந்தா என்று குறிப்பிட்டு எழுதும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். பழைய சந்தாதாரர்கள், தமது கடிதப் போக்குவரத்துகள் எல்லாவற்றிலும் சந்தா எண்ணையும் முழு விலாசத்தையும் அவசியம் குறிப்பிட்டு எழுத வேண்டுகிறோம்.

விவரங்களுக்கு:

தொலைபேசி : 71231

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம் காரியாலயம்
ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்
மயிலாப்பூர் :: சென்னை-600 004

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்

தொகுதி—58 || டிசம்பர் 1978 || இதழ்—12

பொருளடக்கம்

பக்கம்

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்

'எழுமின், விழிமின், குறிசாரும் வரை நில்லாது செல்மின்!'

தொகுதி 58

காளயுக்தி ௵ தை முதல் மார்கழி முடிய

1978

ஆசிரியர் : சுவாமி தன்மயானந்தர்

துணை ஆசிரியர் : பிரம்மசாரி நிரஞ்ஜன சைதன்யா

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் காரியாலயம்

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்
16, ராமகிருஷ்ண மடம் ரோடு

மயிலாப்பூர்
சென்னை-600 004

பொருளடக்கம்

(அகர வரிசை)

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்—1978

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமன் இல்லை

—திருமூலர்

தொகுதி 58 || காளயுக்தி ஸூ மார்கழி மீ || இதழ் 12

பிரார்த்தனை

न जानामि योगं जपं नैव पूजां
नतोऽहं सदा सर्वदा देव तुभ्यम् ।
जराजन्मदुःखौघतातप्यमानं
प्रपन्नं प्रभो पाहि मामीश शम्भो ॥

ந ஜாநாமி யோகம் ஜபம் நைவ பூஜாம்
நதோஹம் ஸதா ஸர்வதா தேவ துப்யம் |
ஜரா-ஜந்ம-து:கௌகதாதப்யமாநம்
ப்ரபந்நம் ப்ரபோ பாஹி மாமீச சம்போ ||

—ஸ்ரீருத்ராஷ்டகம்

நான் யோகம் அறியேன்; ஜபமோ வழிபாடோ அறிந்திலேன். சம்போ! என்றும் எப்போதும் உன்னையே வணங்குகிறேன். ஈசா, பிரபோ! மூப்பு, பிறப்பு ஆகிய தொல்லைகளில் வெந்து தவிக்கும் என்னைக் காத்தருளுக.

ஹரிஹரனின் திருச்சுதனே ஐயப்பா நின்
அடிசேர்ந்த அடியேனைக் கடையே னென்று
வரிபிடித்துத் தள்ளாதே, வலிமை யில்லேன்
மனத்தமர்ந்தே எனைநடத்தி வழியும் காட்டு;
பரிவுகொண்டே எனையாண்டு தூய னுக்கு;
பாதமதைக் காட்டி யெனைப் புனித னுக்கு;
கருமலையின் ஒளிவிளக்கே, தரும சாஸ்தா,
கைதொழுதேன் இருள்நீக்கி அருள்வாய் நீயே.

—ஐயப்பன் தோத்திரம்



ஸ்ரீ ராமகிருஷ்ணரின் அருள் வாக்கு

1882 அக்டோபர் 16

இன்றைய தினம் குருதேவரின் உள்ளத்தில் அன்பு வழிந்தோடியது. அப்போது இரவு சுமார் எட்டு மணி இருக்கும். குருதேவர் தெய்விகப் பரவசத்தில் மூழ்கியவராய், தன்னந்தனியாகத் தாழ்வாரத்தில் நடந்துகொண்டிருக்கிறார். வடக்கில் உள்ள நீண்ட தாழ்வாரத்தின் ஒரு கோடியிலிருந்து மற்றொரு கோடிக்கு நடந்தபடி இருக்கிறார்.

இடையிடையே அம்பிகையோடு அவர் ஏதோ பேசிக்கொண்டிருக்கிறார். திடீரென்று பித்தர் போன்று அவர், ‘‘உன்னால் என்னை என்ன செய்துவிட முடியும்?’’ என்று உரக்கக் கூறினார். ‘யாரை எல்லாம் ஜகன்மாதா காப்பாற்றுகிறாளோ அவர்களை எல்லாம் மாயை என்ன செய்துவிட முடியும்?’ என்று அவர் கூறினார் போலும்.

அறையின் கிழக்குப் பகுதியில் கதவருகே நரேந்திரரும் மற்றும் சிலரும் உரையாடிக்கொண்டிருந்தனர்.

நரேந்திரர்: இந்தக் காலத்துப் பையன்கள் எப்படி இருக்கிறார்கள்?

ம: அவ்வளவு மோசம் என்று சொல்வதற்கில்லை. ஆனால் மத போதனை எதுவும் அவர்களுக்குத் தரப்படுவதில்லை.

நரேந்திரர்: என் அனுபவத்தில் அவர்கள் கீழ் நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறார்கள் என்றே நினைக்கிறேன். புகைகுடித்தல், வீண்வம்பு செய்தல், ஆடம்பரமாக உடை அணிதல், பள்ளிக்குப் போகாமல் மட்டம் போடுதல்—இவை போன்ற செயல்களை எப்போதுமே பார்க்கிறோம். மேலும் சொல்லப்போனால் போகத் தகாத இடங்களுக்கும் அவர்கள் போகிறார்கள்.

ம: நாங்கள் படித்து வந்த அந்தக் காலத்தில் இப்படியெல்லாம் நாங்கள் பார்த்ததுமில்லை, கேட்டதுமில்லை.

நரேந்திரர்: நீங்கள் அவ்வளவாக மாணவர்களுடன் நெருங்கிப் பழகவில்லை என்று நினைக்கிறேன். பையன்கள் ஒழுக்கமற்றவர்களுடன் பேசுவதைக்கூட நான் பார்த்திருக்கிறேன். பையன்கள் அவர்களை மிகவும் நெருக்கமானவர்கள் போன்று பெயரிட்டே அழைக்கிறார்கள்! எப்போது இவர்களுக்கு அவர்களுடன் அப்படிப்பட்ட நெருங்கிய தொடர்பு ஏற்பட்டதோ, யாருக்குத் தெரியும்?

ம: அப்படியா! ஆச்சரியமாக இருக்கிறதே!

நரேந்திரர்: பலருடைய ஒழுக்கம் கெட்டுவிட்டது என்பது எனக்குத் தெரியும். பள்ளி நிர்வாகிகளும் பிள்ளைகளின் பெற்றோர்களும் இந்த விஷயங்களில் எல்லாம் சற்றுக் கவனம் செலுத்தினால் நல்லது.

இவ்விதம் ம-வும் நரேந்திரரும் பேசிக்கொண்டிருந்தபோது, குருதேவர் தமது அறையிலிருந்து அவர்கள் இருந்த இடத்திற்கு வந்தார். புன்முறுவலுடன் அவர் அவர்களைப் பார்த்து, ‘‘என்னப்பா, உங்களுக்குள்ளே என்ன பேசிக்கொண்டிருக்கிறீர்கள்?’’ என்று கேட்டார்.

நரேந்திரர் (ம-வைச் சுட்டிக் காட்டி.): இவருடன் பள்ளி மாணவர்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தேன். இந்தக் காலத்தில் மாணவர்களின் ஒழுக்கம் சரியாகவே இல்லை.

குருதேவர், அவர்கள் என்ன பேசிக்கொண்டிருந்தார்கள் என்பதைக் கேட்டதும் ம-வை நோக்கிக் கடுமையான குரலில் கூறினார்: ‘‘இப்படிப்பட்ட பேச்சில் ஈடுபடுவது நல்லதல்லவே. கடவுள் சம்பந்தமாகப் பேசுவதைத் தவிர வேறு எந்தவிதப்

பேச்சிலும் ஈடுபடுவது நல்லதல்ல. நீ இவர்களைவிட வயதில் பெரியவன்; அதோடு புத்திசாலியாகவும் இருக்கிறாய். அப்படியிருக்க, இத்தகைய பேச்சுகள் எழுவதற்கு நீ இடமளித்தது சரியல்ல.''

நரேந்திரருக்கு அப்போது பத்தொன்பது வயது. ம-வுக்கு இருபத்தெட்டு வயது நடந்துகொண்டிருந்தது. குருதேவர் இவ்விதம் கண்டிப்பார் என்று ம-எதிர்பார்க்கவில்லை. அவருக்குத் தர்மசங்கடமாகி விட்டது. நரேந்திரர் முதலியோர் வாய்மூடி மௌனமாக இருந்தனர்.

* * *

குருதேவர் ஒரு பக்தரிடம்*, ''நீ கனவு காண்பதுண்டா?'' என்று கேட்டார்.

பக்தர்: ஆம், அன்றைய தினம் நான் ஆச்சரியமான ஒரு கனவு கண்டேன். இந்த உலகம் முழுவதும் ஒரே தண்ணீர்மயமாக இருந்தது! நாலாபுறங்களிலும் எல்லையே காண இயலாத வகையில் தண்ணீர் சூழ்ந்திருந்தது! சில படகுகள் அங்கு மிதந்துகொண்டிருந்தன. சிறிது நேரத்தில் பெரிய அலைகள் எழுந்து அந்தப் படகுகளை மூழ்க அடித்து விட்டன. சிலருடன் நான் ஒரு கப்பலில் ஏறிக் கொண்டேன். அதே சமயத்தில், எல்லையே காண இயலாத அந்தக் கடலின்மீது ஒரு பிராம்மணர் நடந்துகொண்டிருந்ததைக் கண்டேன். அவரிடம் நான், 'உங்களால் எப்படி நடந்து போக முடிகிறது?' என்று கேட்டேன். அதற்கு அந்தப் பிராம்மணர் புன்சிரிப்புடன், 'இதில் ஒரு கஷ்டமும் இல்லையே! தண்ணீருக்கு அடியில் கீழே ஒரு பாலம் இருக்கிறது' என்று கூறினார். நான் அவரை, 'நீங்கள் எங்கே போகிறீர்கள்?' என்று மீண்டும் கேட்டேன். அவர், 'ஜகன்மாதாவின் நகரமாகிய பவானிபுரத்திற்குப் போய்க்கொண்டிருக்கிறேன்' என்று பதில் சொன்னார். நான், 'கொஞ்சம் இருங்கள்; நானும் உங்களோடு வருகிறேன்' என்று கூவினேன்.

ஸ்ரீராமகிருஷ்ணர்: ஹா! இதைக் கேட்கவே எனக்கு மயிர்க்கூச்செறிகிறது!

பக்தர்: ஆனால் அந்தப் பிராம்மணர், 'நான் இப்போதே விரைவாகச் செல்ல வேண்டும். நீ படகிலிருந்து நீரில் இறங்குவதற்குச் சிறிது நேரம் பிடிக்கும். இப்போதைக்கு இருக்கட்டும். நான் செல்லும் இந்த வழியைப் பார்த்து நினைவில் வைத்துக்கொள். பிறகு நீ என்னைத் தொடர்ந்து வந்துவிடலாம்' என்று கூறிவிட்டார்.

ஸ்ரீராமகிருஷ்ணர்: ஹா! எனக்கு மயிர்க்கூச்செறிகிறது. நீ சீக்கிரமாகவே மந்திர தீட்சை பெற்றுக்கொள்.

ஸ்ரீராமகிருஷ்ணர் (நரேந்திரர் முதலியவர்களிடம்): பக்தியே—கடவுள்மீது கொள்ளும் அன்பே—எல்லா ஞானசாதனங்களின் சாரமாகும். ஆண்டவனிடம் ஆழ்ந்த அன்பு செலுத்தினால் விவேகமும் வைராக்கியமும் தாமாகவே ஏற்படும்.

அப்போது அங்கு வந்த நானக் சம்பிரதாயத்தைச் சேர்ந்த சாதுக்கள், 'நமோ நாராயணாய' என்று சொல்லி, (சாதுக்கள் ஒருவரையொருவர் வணங்குகிற முறைப்படி 'நாராயணனுக்கு வணக்கம்' என்ற பொருளில்) குருதேவரை வணங்கினர். குருதேவர் அவர்களை ஆசனங்களில் அமரும்படி கேட்டுக்கொண்டார்.

ஸ்ரீராமகிருஷ்ணர்: இறைவனால் இயலாதது என்று எதுவுமே இல்லை. அவரது இயல்பை யாராலுமே வாக்கினால் சொல்ல முடியாது. அவர் எதையும் செய்யக்கூடிய ஆற்றல் பெற்றவர். இரண்டு யோகிகள் இருந்தார்கள். அவ்விருவரும் ஈசுவரனைக் குறித்துச் சாதனம் பழகிக்கொண்டிருந்தனர். ஒரு நாள் நாரதரிஷி அவர்கள் இருந்த வழியாகச் சென்றார். ஒரு யோகி நாரதரைப் பார்த்து, ''நீங்கள் நாராயணனிடமிருந்து அல்லவா வருகிறீர்கள்! அவர் என்ன செய்துகொண்டிருக்கிறார்?'' என்று கேட்டார். நாரதர் அதற்கு, ''நான் பார்த்தேன். பகவான் ஓர் ஊசியின் காது வழியாக ஒட்டகம், யானை ஆகியவற்றை நுழைத்துக்கொண்டும், மீண்டும் வெளியே எடுத்துக்கொண்டும் இருக்கிறார்'' என்று பதில் சொன்னார். ஒரு யோகி இதைக் கேட்டதும், ''இதிலே என்ன ஆச்சரியம் இருக்கிறது? அவரால் எதையும் செய்ய முடியும்'' என்று சொன்னார். ஆனால் மற்றொரு யோகியோ, ''இது என்ன, நடக்கக்கூடிய காரியமா? நீங்கள் ஒருபோதும் பகவானது இருப்பிடத்திற்குச் சென்றதே இல்லை!'' என்று மறுத்துக் கூறினார்.

நரேந்திரரும் அவருடைய நண்பர்களும் நீராடிவிட்டு வந்தனர். குருதேவர் சிரத்தையுடன், ''பஞ்சவடிக்குச் சென்று ஆலமரத்தடியில் தியானம் செய்யுங்கள். தியானத்தில் உட்கார உங்களுக்கு ஆசனம் தரட்டுமா?'' என்று நரேந்திரரைக் கேட்டார்.

---

* ம-தமது பெயரைக் குறிப்பிடாமல் ஒரு பக்தர் என்று இங்குக் குறிப்பிட்டிருக்கிறார். —மொழிபெயர்ப்பாளன்

சுமார் பத்தரை மணி இருக்கும். நரேந்திரரும் அவருடைய பிரம்ம சமாஜ நண்பர்கள் சிலரும் பஞ்சவடியின் மரத்தடியில் தியானித்துக் கொண்டிருந்தனர். சிறிது நேரம் கழிந்தபிறகு குருதேவரும் அந்த இடத்திற்கு வந்து சேர்ந்தார். அவருடன் ம—வும் வந்தார். குருதேவர் பேச ஆரம்பித்தார்.

ஸ்ரீராமகிருஷ்ணர் (பிரம்ம சமாஜ அன்பர்களிடம்) : தியானம் செய்யும்போது கடவுளின் நினைவிலேயே மனம் மூழ்கிவிட வேண்டும். நீரின் மேற்பரப்பின்மீது மட்டுமே மிதந்துகொண்டிருந்தால் நீரின் கீழ்ப்பகுதியில் கிடக்கும் ரத்தினங்களைப் பெற முடியுமா என்ன?

நரேந்திரரும் அவரது நண்பர்களும் பஞ்சவடியின் மேடையிலிருந்து கீழிறங்கி வந்து, குருதேவரின் முன்னிலையில் நின்றனர். குருதேவர் அவர்களோடு பேசிக்கொண்டே தமது அறையை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்.

ஸ்ரீராமகிருஷ்ணர் : நீ கடலில் மூழ்கும்போது முதலைகள் உன்னை வந்து பிடித்துக்கொள்ளக்கூடும். ஆனால் உடலில் மஞ்சள் பூசிக்கொண்டோமானால் அவை உன்னைத் தொடமாட்டா. இதயக் கடலின் ஆழம் காண முடியாத தண்ணீரிலே காமம் குரோதம் முதலிய ஆறு முதலைகள் உள்ளன. ஆனால் விவேகம் வைராக்கியம் என்னும் மஞ்சளைப் பூசிக்கொண்டால் அவை உன்னைத் தீண்டவே தீண்டா.

விவேகமும் வைராக்கியமும் ஏற்படாவிட்டால் வெறும் பாண்டித்தியமும் சொற்பொழிவு செய்வதும் என்ன பயனைத் தரும்? கடவுள் மட்டுமே சத்தியம்; மற்றவை எல்லாமே அநித்தியமானவை; ஆண்டவன் ஒருவன் மட்டும்தான் உண்மையான வஸ்து (பொருள்); மற்றவை அனைத்துமே அவஸ்து (பொருள் ஏதும் இல்லாததே) ஆகும். இவ்விதம் தெளிவாக உணர்ந்துகொள்ளுவதுதான் விவேகம் எனப்படும்.

முதலில் ஆண்டவனை இதயக் கோவிலில் பிரதிஷ்டை செய்வாயாக. பிறகு வேண்டுமானால் பேச்சு, பிரசங்கம் ஆகியவற்றைச் செய்துகொள். விவேகமும் வைராக்கியமும் இல்லாமல் வெறுமனே 'பிரம்மம், பிரம்மம்' என்று திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருப்பதனால் என்ன பயன் ஏற்படும்?

ஆழ்ந்து மூழ்குவதற்கு யாருமே விரும்புவதில்லை. ஞானசாதனம் செய்வதில்லை, பஜனை செய்வதில்லை, விவேக வைராக்கியம் பழகுவதில்லை. ஏதோ இரண்டொரு வார்த்தைகளைக் கற்றுக் கொண்டதுமே உடனே பிரசங்கம் செய்யத் தொடங்கி விடுகிறார்கள்!

மக்களுக்குப் போதிப்பது மிகவும் கடினமான விஷயம். பகவானது தரிசனம் கிடைத்த பிறகு, அவரிடமிருந்து யாராவது ஆணையைப் பெற்றால் மட்டுமே மக்களுக்குப் போதிக்க உரிமையுடையவனாவான்.

இவ்விதம் பேசிக்கொண்டே குருதேவர் வடக்குத் தாழ்வாரத்தின் மேற்குப் பகுதியில் வந்து நின்றார். ம-வும் அருகில் நின்றுகொண்டிருந்தார்.

'விவேகமும் வைராக்கியமும் இல்லாவிட்டால் பகவானை அடையவே முடியாது' என்று குருதேவர் மீண்டும் மீண்டும் கூறிக்கொண்டிருந்தார். ம-வுக்குத் திருமணம் ஆகியிருந்தது. ஆகவே அவர், 'என் நிலை என்ன ஆகுமோ?' என்று யோசிக்கலானார். அவருக்கு வயது இருபத்தெட்டு. கல்லூரியில் படித்து ஆங்கிலக் கல்வி சிறிது கற்றிருந்தார். 'விவேக வைராக்கியம் என்றால் காம காஞ்சனத்தைத் தியாகம் செய்வது அல்லவா?' என்று அவர் தமக்குள்ளேயே நினைத்துக்கொண்டார்.

ம- (ஸ்ரீராமகிருஷ்ணரிடம்): மனைவி ஒருத்தி கணவனைப் பார்த்து, 'நீங்கள் என்னைக் கவனிப்பதே இல்லை. நான் தற்கொலை செய்துகொள்ளுகிறேன்' என்று கூறினால் என்ன செய்வது?

ஸ்ரீராமகிருஷ்ணர் (கண்டிப்பான குரலில்) : பகவானை அடைய விரும்பும் பாதையிலே குறுக்கே நிற்கும் அத்தகைய மனைவியைப் புறக்கணித்து விடு. அவள் தற்கொலைதான் செய்துகொள்ளட்டும், அல்லது வேறு என்ன வேண்டுமானாலும்தான் செய்துகொள்ளட்டும்! கடவுளை அடையும் வழியில் எவள் குறுக்கே நிற்கிறாளோ அவள் அவித்யை வடிவான பெண் ஆவாள்.

ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியவராய் ம- சுவரில் காலை வைத்துக்கொண்டு சாய்ந்து நின்றுகொண்டிருந்தார். நரேந்திரரும் மற்றப் பக்தர்களும் ஒரு வினாடி நேரம் வாய்பேசாமல் வியப்புடன் நின்றனர்.

குருதேவர் அவர்களுடன் ஒருசில வார்த்தைகள் பேசினார். பிறகு திடீரென்று அவர் ம-வின் அருகில் வந்து, தனிமையில் அவரது காதிலே பின்வருமாறு கூறினார்: "ஆனால் எவனுக்கு இறைவனிடம் உண்மையிலேயே ஆழ்ந்த பக்தி இருக்கிறதோ அவனுக்கு எல்லாமே சாதகமாக அமைந்து விடும். அரசன், தீயவர், மனைவி ஆகிய அனை


வருமே சாதகமாக அமைந்து விடுவார்கள். ஒருவனுக்கு மனப்பூர்வமான பக்தி இருக்குமேயானல் நாளடைவில் அவனுடைய மனைவியும் ஞான வாழ்க்கையைப் பின்பற்றுவது சாத்தியமாகிவிடும். ஒருவன் நல்லவனுக இருப்பானுயின் ஈசுவர கிருபையால் மனைவியும் நல்லவளாக ஆகிவிடக் கூடும்.

குருதேவரின் இந்த வார்த்தைகள் ம-வின் மனக் கவலை என்னும் நெருப்பின் மீது நீர் ஊற்றியது போல ஆறுதலாக இருந்தன. அவர் அவ்வளவு நேரமும் தமது நிலையைக் குறித்து, 'மனைவி தற்கொலை செய்துகொண்டால் செய்துகொள்ளட்டும். அதற்கு நான் என்ன செய்ய முடியும்?' என்று நினைத்துக்கொண்டே இருந்தார்.

ம- (ஸ்ரீராமகிருஷ்ணரிடம்) இல்லற வாழ்க்கை உண்மையிலேயே மிகவும் பயங்கரமானது.

ஸ்ரீராமகிருஷ்ணர் (ம-, நரேந்திரர் ஆகியோரைப் பார்த்து): ஆகவேதான் சைதன்ய தேவர் தமது தோழராகிய நித்தியானந்தரிடம், ''சகோதரர் நித்தியானந்தரே! கவனமாகக் கேளுங்கள், கேளுங்கள்: உலக ஆசைகளுடன் இல்லறத்தில் உழலும் மக்களுக்குக் கதிமோட்சமே கிடையாது'' என்று சொன்னுர்.

ம-விடம் குருதேவர் அந்தரங்கமாகத் தனிமையில் கூறினர்: ''ஈச்வரனிடம் தூய பக்தி இல்லாமற் போகுமானல் அப்படிப்பட்ட இல்லறத்தவன் கடைத்தேறுவதற்கு வேறு எந்தவிதமான வழியும் கிடையாதுதான். ஆனல் இறைவனின் தரிசனத்தைப் பெற்றபிறகு யாராகிலும் சம்சார வாழ்க்கையில் தங்கியிருந்தால் அப்படிப்பட்டவருக்கு எந்த வகையான பயமுமே இல்லாமற் போய்விடும். தனிமையான இடத்தில் யார் ஒருவர் அடிக்கடி ஆத்மசாதனை பழகுவதன் பயனுகத் தூய பக்தியைப் பெற்றுவிடுகிருரோ, அப்படிப்பட்டவர் உலக வாழ்க்கையில் தங்கியிருந்தாலும் எந்தவித அச்சமும் இல்லை. சைதன்யதேவருக்கு இல்லறப் பக்தர்களும் இருந்தார்கள். ஆனல் பெயரளவில்தான் அவர்கள் இல்லறத்தில் இருந்தார்கள். ஏனென்றல், அவர்கள் உலகப் பற்றற்றவர்களாகவே வாழ்க்கை நடத்தினர்.



ஆந்திர பிரதேச புயல் நிவாரணம்

சென்ற ஆண்டு புயலால் பாதிக்கப்பட்ட ஆந்திர பிரதேச மக்களுக்கு மொத்தம் 1,000 வீடுகளைக் கட்டித்தர ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் முடிவு செய்தது. அதன் ஒரு பகுதியாகிய திவி தாலுக்காவிலுள்ள கொல்லப்பாலம் என்ற கிராமத்தில் 229 வீடுகளை பாரதப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள் 13-11-78ஆம் நாள் திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியை ஒட்டி நடைபெற்ற பொதுக்கூட்டத்திற்கு, ஸ்ரீராமகிருஷ்ண மிஷனின் டிரஸ்டிகளில் ஒருவராகிய ஸ்ரீமத் சுவாமி வந்தனனந்தஜி மகராஜ் வரவேற்புரைக் கூறினர். ஆந்திரப் பிரதேச முதல்வர் டாக்டர் எம். சென்ன ரெட்டி அவர்களின் தலைமையில் நடைபெற்ற அக்கூட்டத்தில் பாரதப் பிரதமர் உரை நிகழ்த்தினர். அடுத்து 'ஸ்ரீராமகிருஷ்ண சமாஜ மந்திரம்' என்னும் பிரார்த்தனைக் கூடத்திற்கும் பிரதமர் அடிக்கல் நாட்டினர். கொல்லப்பாலம் கிராமத்திற்கு 'ஸ்ரீராமகிருஷ்ணபுரம்' என்ற பெயர் சூட்டப் பெற்றது.



வேதநெறி

வைதிக மதம்

இந்து மதத்தில், இவ்வளவு அவ்வளவு என்று ஒரு வரையறை செய்து முடித்துவிட இயலாத வகையில், பட்டியலே போட்டு மாளாத வகையில் ஏராளமான சாஸ்திரங்கள் இருக்கின்றன. இவற்றுள் பிரஸ்தானத்திரயம் என்று பெருமையோடு குறிக்கப் படும் உபநிஷதங்கள், வியாசர் அருளிய வேதாந்த சூத்திரம், பகவத்கீதை ஆகிய மூன்றுமே தலையாய இடத்தைப் பெற்றுப் பிரமாணங்களாக அங்கீ கரிக்கப்பட்டுள்ளன.

உபநிஷதங்கள் வேதங்களில் அடங்கியவை. ஆகவே, இந்து மதத்தைச் சேர்ந்த சாஸ்திரங் களிலேயே முதன்மையான இடத்தைப் பெறுபவை வேதங்களே ஆகும்.

இந்தியாவில் பல தத்துவங்கள், மதங்கள், மதப் பிரிவுகள் தோன்றியுள்ளன. இந்தியாவில் தோன்றிய தத்துவங்களில் உலகாயதம் (Materialism), சமணம், பௌத்தம், சாங்கியம், யோகம், வைசே டிகம், நியாயம், பூர்வ மீமாம்சை (கர்மகாண்டம்), உத்தர மீமாம்சை (வேதாந்தம்) ஆகியவை அடங்கும். இவற்றுள் முதல் மூன்றைத் தவிர ஏனைய ஆறும் வேதங்களைப் பிரமாணங்களாகக் கொண்டவை.

வேதங்களை அடிப்படையாகக் கொண்டு சங்கரர், ராமானுஜர், மத்வர் மற்றும் சில ஆசார்யர்களும் தத்துவங்களை வகுத்திருக்கிறார்கள்.

வேதங்களைப் பிரமாணமாகக் கொண்டவை அனைத்தும் வைதிகச் சமயங்கள் ஆகும். ஆலமரம் போன்று விரிந்து பரந்துள்ள இந்து மதத்தின் உட் பிரிவுகள் அனைத்தும் வைதிகச் சமயங்கள் என்னும் பிரிவில் அடங்கும். இந்தியாவில் தோன்றியிருந் தாலும், வேதங்களை அங்கீகரித்துத் தலையாய பிரமாணமாகக் கொள்ளாத மதமோ மதப் பிரிவோ தத்துவமோ இந்து சமயத்துக்கு உட்பட்ட தாகாது.

வேதங்களை இந்துக்கள் கருதும் முறை

மனம் வாக்குக்கு எட்டாததும் புலன்களுக் கெல்லாம் அப்பாற்பட்டதுமாகிய பரம்பொருளைக் குறித்த உண்மைகளுக்கு இந்துக்கள் வேதத்தைத் தலையாய பிரமாணமாகக் கொண்டுள்ளனர்.

சம்ஸ்கிருதத்தில் உள்ள 'வித்' என்னும் தாது வுக்கு (வேர்ச் சொல்), 'அறிதல்' என்பது பொருள். 'வித்' என்னும் தாதுவிலிருந்து வேதம் என்னும் சொல் பிறந்திருக்கிறது.

உலகில் 'அறிவு', 'அறிதல்' என்று பலவற்றுக்கும் சொல்கிறோம். ஆனால் அவற்றை வேதம் என்று சொல்வதில்லை. 'பரம்பொருளைக் குறித்த மெய்ஞ் ஞானம்' என்னும் பொருளில் மட்டுமே வேதம் என்னும் சொல்லைக் காலமெல்லாம் இந்துக்கள் கையாண்டு வருகிறார்கள்.

உலகிலேயே பரம்பொருளைக் குறித்த அறிவுதான் தலைசிறந்ததும், மிகுந்த பயனுடையதும் ஆகும். ஐம்புலன்களின் துணைகொண்டு பெறப்படும் மற்ற அறிவுகள் எவ்வளவுதான் உயர்ந்தவையாக இருந் தாலும் காலம் இடம் என்னும் வரையறைகளுக்கு உட்பட்டவை. அவை மாறவும் கூடும், மறையவும் கூடும். பரம்பொருளைக் குறித்த ஞானமோ எந்த நிலையிலும் மாறாதது, அழியாதது, எந்த வரை யறைக்குமே உட்படாதது, என்றென்றைக்கும் நித்தியமாக, நிரந்தரமாக விளங்கிக்கொண்டிருப்பது.

ஆகவே 'வித்' என்னும் வேர்ச்சொல்லை அடிப்படையாகக் கொண்டு பெறப்பட்ட வேதம் என்னும் சொல்லை, ரிஷித்துவம் எய்திய ஒருவர் ஆழ்ந்த அனுபூதி நிலையில் தரிசித்த உண்மைகளைக் குறிப்பதற்காக மட்டுமே கையாளுவது மரபு.

ஒலி வடிவத்தில் பரம்பொருளே வேதமாக இருக்கிறார்; வேதஞானத்தைக் கொண்டே ஆண்டவன் பிரபஞ்சங்களைப் படைக்கிறார், காக்கிறார், அழிக்கிறார் என்று வைதிகர்கள் உறுதியாக நம்புகிறார்கள். வேதத்தில் சொல்லப்பட்டுள்ள எல்லா ஞானங்களின் சாரமாகவும் ஓம் விளங்குகிறது; ஆகவே அதை, 'சப்தப் பிரம்மம்' என்று மகான்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

வேத உண்மைகள் சாசுவதமானவை. அவற்றுக்கு ஆரம்பமும் இல்லை, முடிவும் இல்லை. அவை அனாதி. அழியாதனவும், நித்தியத்துவம் பெற்றனவுமான வேத உண்மைகள், ஆண்டவனைப் போலவே எல்லா விதத்திலும் மகிமை பெற்றவை.

வேதங்கள் நித்தியமானவை என்னும்போது, அதன் மூலம் புத்தகங்களைச் சொல்லவில்லை. அவை தெரிவிக்கும் பரம்பொருளைப் பற்றிய கருத்துக்களே நித்தியம் எனப்படுகின்றன. வேத உண்மைகள் முடிந்துவிடவில்லை. மனிதனின் மூச்சுக் காற்றைப் போல, ஆண்டவனிடமிருந்து எப்போதும் அவை தொடர்ந்து வந்துகொண்டிருக்கின்றன.

உபநிஷத உண்மைகளைக் குறிப்பதற்காக, சுருதி, ஆப்த வாக்கியம், அபௌருஷேயம் என்னும் சொற்களை இந்துக்கள் கையாளுகிறார்கள். அதாவது ஒரு மனிதரால் இவை உண்டாக்கப்பட்டவை அல்ல. இந்த உண்மை, பிரபஞ்சத்தின் சிருஷ்டிக்கு முன்னும் இருந்தது; இப்போதும் இருக்கிறது; பிரபஞ்சம் என்ற ஒன்று இல்லாத நிலையிலும் இருக்கும்.

ஆன்மிக உண்மைகளைத் தெரிந்துகொள்வதற்குப் பிரத்தியட்சம், அனுமானம், ஆப்த வாக்கியம் ஆகிய மூன்று வழிகள் அதாவது பிரமாணங்கள் இருக்கின்றன. இவற்றுள் ரிஷிநிலையை அடைந்த ஆத்மஞானியின் அனுபூதி வாக்காக எழும் ஆப்த வாக்கியங்கள்தாம், பிரத்தியட்சம் அனுமானம் ஆகிய இரண்டையும்விட உயர்ந்த பிரமாணங்களாகச் சான்றோர்களால் கருதி ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன.

உள்ளத்தையும் உடலையும் முழு அளவில் அடக்கியவர்களாகவும், ஆழ்ந்த தியானம் கொண்டவர்களாகவும், பரிசுத்தமே வடிவெடுத்ததைப் போன்ற வாழ்க்கையைக் கொண்டவர்களாகவும் விளங்கிய ஆண் பெண்களாகிய ரிஷிகளால் வேத உண்மைகள் மிகவும் உயர்ந்த அனுபூதி நிலையில் பிரத்தியட்ச அனுபவமாகக் கண்டறியப்பட்டன. வேதங்களை ரிஷிகள் கண்டார்கள் என்பதுகூடப் பொருந்தாது. ரிஷிகளை மந்திர த்ரஷ்டாக்கள் என்னும்போது, என்றும் உள்ள உண்மைகளைத் தரிசித்த பெரியோர் என்ற பொருளில் வழங்கப்படுகிறார்கள்.

கிறிஸ்தவ மதம், கிறிஸ்துபெருமான் என்னும் வழிபாட்டுக்குரிய பெரியவர் ஒருவர் அருளிய கருத்துக்களின் அடிப்படையில் எழுந்தது. கிறிஸ்து நாதரைச் சார்ந்து அந்த மதம் விளங்குகிறது.

இதைப் போலவே, நபிகள்நாயகம் அருளிய கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டும் அவரைச் சார்ந்தும் இஸ்லாம் சமயம் விளங்குகிறது.

இவ்விதம் எந்த ஒரு தனி மனிதரையும் சாராமல் இந்து மதம் விளங்குகிறது. மத உண்மைகளைச் 'சொன்னவர்களாக'ப் பிற மதங்களில் பெரியோர் உண்டு. வேத உண்மைகளைத் 'தரிசித்தவர்களே' இந்திய ரிஷிகள்; அவர்கள் அந்த உண்மைகளைத் தரிசித்தவர்களே தவிர, அவற்றைத் தோற்றுவித்தவர்கள் அதாவது சிருஷ்டித்தவர்கள் அல்லர்.

வியாசர், வேத உண்மைகளைச் சிருஷ்டித்தவர் அல்ல; அவர் அந்த உண்மைகளை உலக நன்மைக்காக ரிக், யஜுஸ், ஸாமம், அதர்வம் என்று நான்கு வேதங்களாக நான்கு பிரிவுகளாகப் பிரித்தார். அவற்றை நான்கு சீடர்களுக்குப் போதித்தார்.

வேத உண்மைகள் வழக்கத்தில் வந்த விதத்தை முண்டக உபநிஷதம் சொல்கிறது. புராணங்களிலும், மற்றும் புதுமையான சில உபமானங்களிலும் வேத உண்மைகள் வழக்கத்துக்கு வந்த விதம் விளக்கப்பட்டிருக்கிறது.

வேதகால மக்கள்

வேதகால மக்களின் வாழ்க்கையில் பிரம்மசரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சன்னியாசம் என்ற நான்கு பிரிவுகள் இருந்தன. மனித வாழ்க்கையின் வளர்ச்சியில் நான்கு படிகளைப் போல அமைந்துள்ள இவை நான்கு ஆசிரமங்கள் எனப்பட்டன.

ஒழுக்கமும் கட்டுப்பாடுகளும் நிறைந்தது பிரம்மசரிய ஆசிரமம். குரு ஒருவரிடம் சாஸ்திரங்களைப்

பயிலுவதும் ஆராய்வதும் பிரம்மசரிய ஆசிரமத்தின் முக்கிய அம்சங்கள் ஆகும்.

இந்த ஆசிரமங்களை ஒவ்வொன்ருகக் கடந்து நான்காவதாகிய சன்னியாசத்தை ஒருவன் அடையும்போது, அவனது உள்ளம் பரம்பொருளை அனுபூதியில் உணரக் கூடிய பரிபக்குவத்தைப் பெற்றுத் தயாராக இருக்கிறது. முற்றிலும் தயாராக உள்ள நிலத்தைப் போல உள்ள அவனுக்காகவே ஏற்பட்டதைப் போல உபநிஷதங்கள் அமைந்திருக்கின்றன.

சன்னியாச ஆசிரமத்தை எப்போது வேண்டுமானுலும் பெற்றுக்கொள்வதற்குத் தடை ஒன்றும் இல்லை. அந்த நினைப்பு வந்தவுடனே சன்னியாச வாழ்க்கையை ஏற்றுக் கொள்ளலாம் என்று சாஸ்திரங்கள் அனுமதிக்கின்றன. ஆனுல், ஒவ்வோர் ஆசிரமத்தையும் படிப்படியாகக் கடந்து நான்காவதாகிய சன்னியாசத்தை ஏற்பது என்பது பொதுவாக வழக்கில் இருந்தது.

நான்கு வேதங்களும் சாகைகள் (கிளைகள்) என்ற பல பிரிவுகளைப் பெற்றிருக்கின்றன. நான்கு வேதங்களிலும் சொல்லப்பட்டுள்ள உண்மைகள் அத்தனையும், கர்ம காண்டம், ஞான காண்டம் என்னும் இரண்டு பெரும் பிரிவுகளில் அடங்குகின்றன. மத வாழ்க்கையில் ஈடுபாடு கொண்ட ஒவ்வொருவரும்-குறிப்பாக இந்துக்கள் ஒவ்வொருவரும்-கர்ம காண்டத்தைப் பற்றியும், ஞான காண்டத்தைப் பற்றியும் தெரிந்துகொள்ள வேண்டுவது முற்றிலும் அவசியம்.

கர்ம காண்டம்

கர்ம காண்டத்தின் மிகப் பெரும் பகுதி தற்சமயம் வழக்கத்தில் இல்லை; ஆனுல் உபநிஷதங்களைத் தெரிந்துகொள்வதற்குக் கர்ம காண்டத்தைப் பற்றியும் ஒருசிறிது தெரிந்துகொள்வது அவசியம்.

கர்ம காண்டம் ஸம்ஹிதை, பிராம்மணங்கள், ஆரண்யகங்கள் என்னும் மூன்று பிரிவுகளைக் கொண்டது. பிறப்பு, திருமணம், இறப்பு முதலியவற்றுடன் தொடர்பு கொண்டு இப்போது வழக்கில் உள்ள சடங்குகளும், ஜோதிடம் மற்றும் காயத்திரி மந்திரமும் கர்ம காண்டத்தில் அடங்கியுள்ளன.

ஸம்ஹிதை

பிரம்மசரிய ஆசிரமத்தைச் சேர்ந்தவர்கள் ஸம்ஹிதைப் பகுதிகளை ஓதினுர்கள். இந்தப் பகுதியை மந்திரப் பகுதி என்றும் சொல்வதுண்டு. இந்திரன், வருணன் முதலிய பல தேவதைகளைக் குறித்த மந்திரங்கள், ஸ்தோத்திரங்கள் வடிவில் இதில் அடங்கியுள்ளன.

பிறகு, பல தேவர்கள் என்னும் உருவக் கடவுள் கருத்தையும் கடந்து அருவக் கடவுள் பற்றிய கருத்து இடம் பெறுகிறது. 'ஏகம் ஸத் விப்ரா பஹுதா வதந்தி – ஒரே பரம்பொருளை அறிஞர்கள் பல விதங்களில் அழைக்கிருர்கள்' என்ற உண்மை உணர்த்தப்படுகிறது.

கர்ம காண்டத்தில் இடம் பெற்றுள்ள இயற்கை வழிபாடு, உருவம் படைத்த பல தெய்வங்கள் ஆகியவற்றையும் தாண்டி, பரம்பொருள் ஆண், பெண், அலி என்று சொல்லப்படாமல் 'அது' என்று ஞான காண்டமாகிய உபநிஷதப் பகுதியில் கூறப்படுகிறது. 'தத் ஏகம்—அது ஒன்றே' என்று ரிக்வேதம் குறிப்பிடுகிறது.

பிராம்மணங்கள்

இல்லற வாழ்க்கையை மேற்கொண்டவர்கள் பிராம்மணப் பகுதிகளை ஓதவும் அன்ருட வாழ்க்கையில் பின்பற்றவும் செய்தனர். இவை உரை நடையில் அமைந்திருக்கின்றன. பிராம்மணங்கள் வேள்விகளை இயற்றுபவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகளைப் பற்றி விரிவாகக் கூறுகின்றன. இத்தகைய வேள்விகள் இம்மை மறுமை இரண்டிலும் இன்பங்களைத் தரக் கூடியவை. வேள்விகளால் மகிழும் தேவர்கள் விரும்பிய பலன்களைத் தருகிருர்கள் என்ற உறுதியான நம்பிக்கை அனுபவத்தின் அடிப்படையில் நிலவியது.

தன்னடக்கம், ஒழுக்கம், பஞ்சயக்ஞங்கள், தானதர்மங்கள் செய்வது, புண்ணியச் செயல்களில் ஈடுபடுவது ஆகியவற்றைக் கடைப்பிடிக்கவும் பாவச் செயல்களைத் தவிர்த்து வாழவும் பிராம்மணம் போதித்தது. ஒவ்வொரு வேதத்திலும் பிராம்மணப் பகுதி இடம் பெற்றுள்ளது.

ஸம்ஹிதை, பிராம்மணங்கள் ஆகிய இரண்டும் வேதகால மக்களின் தேவதைகளின் வழிபாட்டு முறைகளுக்குச் சிறப்பாகத் துணைபுரிந்தன.

பஞ்சயக்ஞங்கள் வேதகால மக்களிடையே வழக்கத்தில் இருந்தன.

ஆரண்யகங்கள்

இல்லற வாழ்க்கைக்கும் சன்னியாச வாழ்க்கைக்கும் இடையில் அமைந்த வானப்ரஸ்தர்களுக்காக ஆரண்யகங்கள் ஏற்பட்டன. வானப்ரஸ்த வாழ்க்

கையை மேற்கொண்டவர்கள் ஆரண்யகங்களைக் கற்றார்கள்.

உலகத்தோடு ஒட்டி ஒழுகி வாழும் இல்லற வாழ்க்கையில் உள்ளவர்கள், வேள்விகளை இயற்று வதற்குத் தேவையான பொருள்களைச் சேகரிக்க முடியும். ஆகவே அவர்கள் புற வழிபாடுகளைச் செய்ய முடிந்தது. அப்படிப்பட்ட வாய்ப்பும் வசதி யும் இல்லாத நிலையில் வானப்ரஸ்த ஆசிரமத்தைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். ஆகவே ஆரண்ய கங்களில் வேள்வி கிடையாது; பிராம்மணங் களில் சொல்லப்பட்டிருப்பதைப் போல வேள்வி களை இயற்றுவதற்குத் துணை புரியக்கூடிய பொருள் களும் இல்லை.

ஆகவே ஆரண்யகங்களில் புற வழிபாட்டுக்குப் பதிலாக, அக வழிபாடு இடம் பெறுகிறது. இந்த அக வழிபாட்டைச் சேர்ந்த தியான முறைகளைப் பிருகதாரண்யக உபநிஷத்தால் அறியலாம். ஒவ் வொரு வேதத்தைச் சேர்ந்த ஆரண்யகப் பகுதியின் முடிவிலும் உபநிஷதம் அமைந்திருக்கிறது.

ஆத்மஞானத்திற்கு அழைத்துச் செல்லும் ஒரு சாதனமாக, ஒரு வழியாக, ஒரு படிக்கட்டாக மட்டுமே கர்ம காண்டம் அமைந்துள்ளது. அதில் சொல்லப்பட்டுள்ள வேள்வி, தானம், பஞ்ச யக்ஞங்கள் ஆகியவற்றைச் சுயநலம் இல்லாமலும் தர்மம் தவறாமலும் வழுவாமலும் செய்து வந்தால், உள்ளம் தூய்மை பெற்றுப் பரிபக்குவத்தை அடை கிறது. அவ்விதம் தூய்மை பெற்ற உள்ளம் மேலான ஆன்மிக உண்மைகளைக் கிரகிக்கவும் அனுபூதியில் உணரவும் கூடிய வல்லமையைப் பெறுகிறது. இறுதியில் பரம்பொருளுடன் ஒன்று படவும் செய்கிறது.

கர்ம காண்டமும் ஞான காண்டமும்

பிரம்மசரிய ஆச்ரமத்தைச் சேர்ந்தவர்கள் வேதத்தில் அடங்கிய ஸம்ஹிதைப் பகுதிகளை ஓதினார்கள். பிராம்மணங்களில் சொல்லப்பட்டுள்ள முறைகளை இல்லற வாழ்க்கையை மேற்கொண்ட வர்கள் அனுஷ்டித்தார்கள். வானப்ரஸ்தர்கள் ஆரண்யகங்களைப் பின்பற்றி ஒழுகினார்கள். சன்னி யாசிகள் உபநிஷத உண்மைகளை ஆழ்ந்து ஆராய்ந்து அவற்றின் நெறிப்படி வாழ்ந்தார்கள். நான்கு வருணங்களிலும் நான்கு ஆச்ரமங்களிலும் தலையானதாகச் சன்னியாச வாழ்க்கை அமைந்தது. சமூகத்தின் வழிகாட்டிகளாகத் துறவிகள் விளங்கி னார்கள்.

நான்கு வருணத்தவர்களுக்கும் நான்கு ஆச்ரமத் தினருக்கும் வாழ்க்கைக்கு ஆதாரமாக வேத உண்மைகளே விளங்கின.

கர்ம காண்டத்தைப் பின்பற்றுபவர்களை மீமாம் ஸகர்கள் என்றும், ஞான காண்டத்தைப் பின்பற்று பவர்களை வேதாந்திகள் என்றும் வழங்குவது மரபு.

கர்ம காண்டத்தில் பிராம்மணங்கள் முக்கியத் துவம் பெறுகின்றன. ஞான காண்டத்தில் உப நிஷதங்கள் முதலிடம் பெறுகின்றன.

வேதங்கள் சொல்லும் உண்மைகளில் எந்தவித ஆராய்ச்சி செய்யாமலும், ஐயம் கொள்ளாமலும் எழுத்துக்கு எழுத்து அப்படியே முழு அளவில் மீமாம்ஸகர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். வேதங்கள் சொல்லும் உண்மைகளை அணு அணுவாக ஆராய்ச்சி செய்யும் வேதாந்திகள், அவை கூறும் உண்மைகள் அத்தனையையும் முழு அளவில் ஏற்றுக்கொள்கிறார்கள். மேலும் அத்துடன் அவர்கள் வேதங்களின் சாரமான பகுதியாகிய உபநிஷத உண்மைகளை அனுபூதியில் அடைந்து, ஜீவன்முக்தி நிலையை உலகில் வாழும்போதே பெறுவதையும், மரணத்துக்குப் பிறகு பிரம்மத்துடன் ஐக்கியம் ஆவதையும் இலட்சியமாகக் கொண்டிருக்கிறார்கள்.

ஒப்பற்ற பரம்பொருள் ஒன்று உண்டு என்பதில் மீமாம்ஸகர்கள் கருத்துச் செலுத்தவில்லை. வேத மந்திரங்களுக்கே ஒப்பற்ற ஆற்றல் உண்டு என்று அவர்கள் உறுதியாக் நம்பினார்கள். எனவே அவர்கள் பரம்பொருளுக்குத் தரும் தலையாய இடத்தை வேதமந்திரங்களுக்குக் கொடுத்தார்கள்.

கர்ம காண்டம் இக உலக, மறு உலக இன்பங் களை மட்டுமே நோக்கமாகக் கொண்டது. ஞான காண்டம் இரண்டையும் கடந்த ஜீவபிரம்ம ஐக்கி யத்தை நோக்கமாகக் கொண்டது; பர—அபர ஞானம். கர்மங்கள் உறுதி இல்லாத படகுகளைப் போன்றவை, இஷ்டாபூர்த்தம் பெரிதல்ல போன்ற கருத்துக்கள் உபநிஷதங்களில் இடம் பெறுவதைப் பின்னால் விளக்கமாக நாம் பார்க்கப் போகிறோம். கர்ம காண்டத்தை வேதாந்திகள் எதிர்க்கவில்லை. ஆனால் அவர்கள் கர்ம காண்ட உண்மைகளை ஒப்புக் கொள்வதோடு, அவற்றையும் கடந்த நிலை ஒன்று உண்டு என்கிறார்கள். அவர்கள் கூற்றுக்கு, ஜீவன் முக்தர்களாகிய பகவான் ஸ்ரீரமண மகரிஷியைப் போன்ற ஆத்மஞானிகள் பலர் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறார்கள்.

ஒரு காலத்தில் ஆட்சி செலுத்திய கர்ம காண்டம், பௌத்த மதத்தினராலும் ஆதிசங்கரரின் எழுச்சியாலும் பெரிதும் பாதிக்கப்பட்டுத் தன் செல்வாக்கை இழந்தது. புத்தர், ஆதிசங்கரர் ஆகிய இருவருக்குப் பிறகு, மூன்றுமவராக இந்தியாவில் சுவாமி விவேகானந்தர் என்னும் வலிமை வாய்ந்த மிகப் பெரிய ஆன்மிகப் பேரலை சென்ற நூற்றுண்டில் தோன்றியது. வேதாந்த உண்மைகள், விவேகானந்தரின் வடிவில் தற்கால நவின—யந்திர விஞ்ஞான சகாப்தத்தை விறுடன் நேருக்கு நேராகச் சந்தித்தன.

ஞான காண்டத்தின் வாரிசு என்று சொல்லத்தக்க சுவாமி விவேகானந்தர், "வேதாந்தமாகிய சிங்கம் கர்ஜிக்கட்டும்", "காட்டில் நிலவிய வேதாந்த உண்மைகள் நாட்டில் உள்ள ஒவ்வொரு வீட்டையும் சென்றடையட்டும்" என்று உறுதியான வெண்கலக் குரலில் முழங்கினர். ஆன்மிகத் துறையில் புதிய யுகத்தின் நாயகராக விளங்கிய காரணத்தால், சுவாமி விவேகானந்தரால் வேதாந்தத்தில் புதிய எழுச்சியையும் மறுமலர்ச்சியையும் தோற்றுவிக்க முடிந்தது.

கோயில் பிராகாரங்களைச் சுற்றி வரும் நிலையில் கர்ம காண்டத்தினர் இருந்தனர். கோயிலைச் சுற்றி முடித்துக் கர்ப்பக்கிருகத்தை அடைந்து சுவாமியை நேருக்கு நேராகத் தரிசிக்கும் நிலையில் ஞான காண்டத்தினர் இருந்தனர் எனலாம். *

O O O

வாணியம்பாடியில் வெள்ள நிவாரணம்

வெகு வேகமாக விஞ்ஞானம் பரவி வரும் இந்தக் காலத்திலுங்கூடப் பல சமயங்களில் இயற்கையின் கோரச் செயலைத் தடுக்க முடியாமல் மக்கள் தவிப்பதைக் கண்கூடாகக் காண்கிறோம்.

வடநாட்டில் பிரளயமே போலப் பெருவெள்ளமாக இருக்க, வாணியம்பாடியில் சுற்றுப்புறப் பகுதி மக்களோ குடிக்கத் தண்ணீர் இல்லாமல் வாடி வதங்கினர். 25-9-78 அன்று வானம் கண் திறந்தது. அதை வெயிலிலே காய்ந்த மக்கள் வரவேற்றனர் என்றாலும், அது ஓரண்டொரு இடங்களிலே தன் கோரச் செயலைக் காட்டத்தான் செய்தது. அது காரணமாக வாணியம்பாடி நகரம் பெரிதும் பாதிக்கப்பட்டது. திடீரென்று பெய்த பெருமழை காரணமாகக் காட்டாறுகள் கரைபுரண்டு ஓட, அவற்றின் கரையிலே இருந்த ஆயிரக்கணக்கான குடிசைகள் அடித்துச் செல்லப்பட்டன.

பகலிலே வெள்ளம் வந்திருந்தாலும் மக்கள் சமாளித்துக்கொண்டிருப்பார்கள். இரவிலே வந்ததனால் அவர்கள் பட்ட துன்பத்திற்கு அளவே இல்லை. ஒரு குடிசையில் வாழ்ந்த எட்டுப் பேர்களில் வயதான முதியவர் ஒருவரைத் தவிர மற்ற ஏழு பேர்களையும் வெள்ளம் அடித்துச் சென்றுவிட்டது. இங்கும் அங்குமாக மேலும் ஆறு பேர்களும் கால்நடைகள் பலவும் பிணமாயின.

வாணியம்பாடியில் பொருள் வசதியும் இரக்க உள்ளமும் கொண்ட சிலரும் தமிழக அரசினரும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் பள்ளிக்கூடம் போன்ற இடங்களில் தங்க ஏற்பாடு செய்தனர்; அவர்களின் உணவுக்கும் வசதி செய்து தந்தனர்.

"மக்கள் சேவையே மகேசுவர பூஜை" என்ற சுவாமி விவேகானந்தரின் உயர்ந்த கோட்பாட்டிற்கிணங்க, எண்பது ஆண்டுகளுக்கும் மேலாக நிவாரணப் பணிகளில் மிகவும் அனுபவம் பெற்றுள்ள ஸ்ரீராமகிருஷ்ண மிஷனின் கிளை ஸ்தாபனமாகிய நாட்டறம்பள்ளி மடத்தினர், சென்னை ஸ்ரீராமகிருஷ்ண மிஷனின் ஆதரவில் வாணியம்பாடிப் பகுதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு நேரில் சென்று, பாதிக்கப்பட்டோரின் தேவைகளையும் நிலைமைகளையும் நேரில் அறிந்து, அலுமினியப் பாத்திரங்கள், புத்தாடைகள், அரிசி, பருப்பு, உப்பு முதலியவற்றை ஒழுங்காகவும் முறையாகவும் 4-10-78, 22-10-78 ஆகிய இரண்டு நாட்களும் வழங்கினார்கள். பழைய துணிகளும் விநியோகிக்கப்பட்டன.

அன்னையின் அறிவுரைகள்

அ. லெ. நடராஜன்

அன்னை ஸ்ரீ சாரதாதேவியார் எழுதப் படிக்கத் தெரியாதவர். ஆகவே தமக்கு வரும் கடிதங்களைப் பிறரைக் கொண்டு படிக்கச் சொல்லிக் கேட்பார்; பதில் எழுத வேண்டிய கடிதங்களுக்கு விவரம் சொல்லிப் பதில் எழுதச் சொல்வார்; அன்னையின் வாழ்வில் ஒளிவுமறைவு எதுவும் இல்லை. அவருடைய வாழ்க்கை திறந்த ஏடு போன்று விளங்கியது.

பக்தர் ஒருவரின் மகள் தன் மாமனாரின் இல்லத்திலிருந்து அன்னைக்கு ஒரு கடிதம் போட்டாள் அதில், ''அன்னையே! தங்களைத் தரிசிக்க வேண்டுமென்ற விருப்பம் எனக்கு இருக்கிறது. எனது வணக்கத்தை உங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். நான் கடிதம் எழுதியிருப்பது, என் கணவரின் உறவினர்களுக்குத் தெரிய வேண்டாம். இது எனது வேண்டுகோள்'' என்று குறிப்பிட்டிருந்தாள்.

இந்த விவரம் தெரிய வந்ததும் பின்வரும் பதிலை, கடிதத்தைப் படித்துச் சொன்னவருக்கு அன்னை சொன்னார்: ''இந்தப் பெண்ணுக்குப் பதிலே எழுத வேண்டாம். அவளுடைய கடிதப் போக்குவரத்தை நான் மறைத்து வைக்க வேண்டும் என்று அவள் விரும்புகிறாள். எதையும் மறைத்து வைக்கும் வழக்கம் என்னிடம் இல்லை. எனக்கு வரும் கடிதங்களை யாரும் பார்க்கலாம். அவர்கள் எனக்கு எழுதும் கடிதங்களைப் பிறர் படிப்பது கூடாது என்று பல பெண்மணிகள் என்னிடம் கூறுகின்றனர். அது எவ்வாறு சாத்தியமாகும்? வஞ்சனையோ சூதுவாதோ என்னிடம் எதுவும் இல்லை. அப்படி இருக்கும்போது எனக்கு வரும் கடிதங்களைப் பிறர் படிப்பதனால் எதுவும் கெட்டுவிடாது'' என்று ஸ்ரீஅன்னையார் தெரிவித்தார்.

* * *

'சன்னியாசத்தை ஏற்பதற்கான அருகதை பெண்களுக்கு உண்டா இல்லையா?' என்பது முக்கியமான ஒரு கேள்வி.

ஆற்றலுள்ளவர்களாக இருந்தால் பெண்பாலரும் சன்னியாசத்தைத் தழுவலாம்; அதில் தவறில்லை. அத்தகையோரை ஆடவராகவே மதிக்க வேண்டும் என்பது ஸ்ரீஅன்னையாரின் கணிப்பாகும். ''பெண்கள் சன்னியாசினியாகலாம் என்பதற்கு ஓர் உதாரணத்தை எடுத்துக்கொள்வோம். கௌரிதாஸியைப் பாருங்கள். அவளை ஒரு பெண் என்று கூற முடியுமா? எந்த ஆண்மகனையும் மிறக்கூடிய ஆற்றலும் துணிவும் அவளுக்கு உண்டு. எத்தனையோ காரியங்களை அவள் சாதித்திருக்கிறாள். 'ஒரு பெண்



துறவை ஏற்றாளாகில், அவளைப் பெண் என்று கூறக்கூடாது; உண்மையில் அவள் ஓர் ஆண்மகனே ஆவாள்' என்று ஸ்ரீகுருதேவர் கூறுவது உண்டு'' என்று அன்னை அருளினார்.

* * *

அண்மைக் காலத்தில் கைம்பெண்ணான இளம் பெண் ஒருத்தி அன்னையிடம் தீட்சை பெற வந்தாள். அவள் ஆன்மிகத்தில் பிடிப்புள்ளவள்; அன்னையிடம் விசுவாசமுள்ளவள்.

அந்தக் கைம்பெண்ணுக்குப் பின்வரும் அறிவுரைகளைக் கூறிவிட்டு அன்னை தீட்சை கொடுத்தார்.

''பெண்ணே! இதோ பார், அண்மைக் காலத்தில் கணவனை இழந்த எந்த ஒரு பெண்ணுக்கும் தீட்சை கொடுப்பது என் வழக்கம் இல்லை. ஆயினும் உன்னிடம் ஆன்மிகப் பிடிப்பு மிகுந்து காணப்படுவதனால் விதிவிலக்காக உனக்கு நான் தீட்சை செய்து வைக்கிறேன். இதற்காக நான் வருந்தக்கூடிய நிலை எனக்கு ஏற்படுமாறு நீ நடக்கக் கூடாது.

அன்னை ஸ்ரீ சாரதாதேவியார் பெண்களுக்கு வழங்கிய சில அறிவுரைகள் இங்கே தொகுத்துத் தரப்படுகின்றன.

சீடர் செய்யும் பாவம் குருவையும் சாரும். உபதேசித்த மந்திரத்தை ஒழுங்காக ஜபித்து வா'' என்று கூறினர்.

இந்தப் பெண் ஒரு சமயம் தன் மாமனர் இல்லம் போக இருந்தாள். அப்போது அந்தப் பெண்ணுக்கு அன்னை கூறிய அறிவுரையாவது: ''மகளே! யாருடனும் அதிகமாகப் பழக்கம் வைத்துக்கொள்ளாதே. குடும்பத்தின் லௌகிக காரியங்களில் தலையிட்டுப் பெரும் பங்கு கொள்ளாதே! 'மனமே! எப்பொழுதும் உன் அளவோடு நின்றுகொள். பிறரைப் பற்றிய விஷயங்களை அறிவதில் ஆவல் கொள்ளாதே!' என்று உனக்கு நீயே கூறிக்கொள். வழிபாடு, தியானம் ஆகியவற்றுக்கு உரிய நேரத்தைப் படிப்படியாக அதிகம் ஆக்கிக்கொள். ஸ்ரீகுருதேவரின் போதனைகளைப் படித்து வா.''

* * *

பெண் சிஷ்யை ஒருத்தி, ஒரு சமயம் அன்னையுடன் தனியாக இருந்தாள். அப்போது அன்னை அவளுக்குக் கூறிய உபதேசமாவது : ''மகளே! ஆடவர் எவருடனும் நெருங்கிய பழக்கம் வைத்துக் கொள்ளாதே. உன் சொந்தத் தந்தையுடனும் சகோதரனுடனுங்கூட நெருக்கம் வேண்டாம். இவர்களுடனும் நெருங்கிப் பழகக்கூடாது என்றல்; பிற ஆடவர்களைப்பற்றிக் கேட்பானேன்? மீண்டும் கூறுகிறேன்: கடவுளே உன்னிடம் ஆண்வடிவத்தில் வந்தாலுங்கூட, அந்த ஆடவனுடனுங்கூட நீ நெருங்கிப் பழகாதே.''

* * *

மடமாயினும் சரி, அல்லது வேறு எந்த இடமாயினும் சரி, துறவிகள் வாழும் இடத்துக்குப் பெண்கள் அடிக்கடி போவது கூடாது என்று அன்னை அறிவுரை கூறியுள்ளார்: ''மகளே! உன் உள்ளத்தில் கெட்ட எண்ணம் எதுவும் இல்லாமலே இருக்கலாம். தூய எண்ணத்துடனேயே துறவிகளை நீ தரிசிக்கச் செல்லக்கூடும். ஆனல் உன்னை அங்கே பார்ப்பது காரணமாகத் துறவிகளின் உள்ளத்தில் அசுத்த உணர்வுகள் உதயமாகக் கூடும். அந்த அசுத்த எண்ணத்துக்கு நீயே பொறுப்பாளியாகிறய் என்பதை நீ தெரிந்துகொள்.''

* * *

ஒரு முறை பக்தைகள் சிலர் அன்னையார் முன்பு உரையாடிக்கொண்டிருந்தனர். அப்போது ஒரு பெண், மற்றொரு பெண்ணைப் பற்றி, மற்ற மாதர்களிடம் குறை கூறிக்கொண்டிருந்தாள்.

இதைக் கவனித்த ஸ்ரீஅன்னையார் குறை கூறிய பெண்மணியிடம், ''இதோ பார் மகளே! அந்தப் பெண்ணிடம் வைத்திருக்கும் மதிப்பை நீ குறைத்துக் கொண்டுவிடாதே. முதல்முதலாக இந்த இடத்துக்கு உன்னை அழைத்து வந்தவள் அவள் தான்'' என்று சொன்னர்.

பிறரைப் பற்றிக் குறைகூறுவதைத் தொழிலாகக் கொண்டுவிட்டால் அது ஆன்மிகத்துக்கு மிகப் பெரிய தடையாகும் என்பது ஸ்ரீஅன்னையாரின் கருத்தாகும்.

* * *

ஒரு பெண்மணி தனக்குப் பிள்ளை இல்லையே என்ற ஏக்கத்தில் தத்துப்பிள்ளை எடுத்துக்கொள்ள ஆசைப்பட்டாள். இதை அன்னையிடம் தெரிவித்து, அன்னையின் அனுமதியைக் கோரினள். அவளுக்கு அன்னை, ராதுவால் தமக்கு நேர்ந்த கஷ்டங்களை விவரித்துவிட்டு, ''பெண்ணே! தத்துப்பிள்ளை எடுத்துக் கொள்ள ஆசைப்படாதே. பிறருக்குச் செய்ய வேண்டிய கடமைகளை எப்பொழுதும் ஒழுங்காகச் செய்து வா. பகவானிடம் அன்பைச் செலுத்திக் காரியங்களைச் செய். லௌகிக அன்பின் விளைவாக ஒருவர் சொல்லொணுத துயரங்களையே அனுபவிக்க நேரும்'' என்றர். ☆

அன்னை ஸ்ரீ சாரதாதேவியின் 126-ஆவது ஜயந்தி, 1978 டிசம்பர் 22ஆம் நாள் வெள்ளிக்கிழமை வழக்கம்போல் விமரிசையாகச் சென்னை ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தில் நடைபெறும்.

ஏ துறவியே! நீ பூமியைப் போலப் பொறுமையாக இருக்கப் பழகு. உனது புத்தகப் படிப்பை எல்லாம் பூமிக்குள் ஆழமாகப் புதைத்துவிடு.

—சூபி சாதி

பகவான் புத்தர் உன் பாவங்களைக் கழுவிவிட மாட்டார்; பகவான் புத்தர் உன்னைப் பாவங்களிலிருந்து விடுவிக்க மாட்டார்; உனக்குப் பதில் தாம் வந்து பிணையாக நிற்க மாட்டார்; பகவான் புத்தர் நமக்கெல்லாம் உண்மையான ரட்சிப்பு மார்க்கத்தைத்தான் காட்டியிருக்கிறர்.

—திபேத்திய தலாய் லாமா

திருவெம்பாவை

திருமுருக கிருபானந்தவாரியார்

திருவாசகத்திலே ஒரு சிறந்த பகுதி திருவெம்பாவை. இது மார்கழியில் ஓத வேண்டிய சிறப்புடையது.

மாணிக்கவாசக சுவாமிகள் திருத்தில்லையிலே ஒரு புறம் பர்ணசாலை அமைத்து, அதில் இருந்து தவம் புரிந்துகொண்டிருந்தார். அம்பலவாணர் ஒரு தவமுனிவராகச் சென்று மாணிக்கவாசகரைக் கண்டு, "அன்பரே! தாங்கள் பாடியருளிய திருவாசகத்தைச் சொல்லும்; நான் எழுதிக் கொள்கிறேன்" என்ருர். அவருடைய விருப்பப்படியே மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகத்தைக் கூறினுர்.

திருவெம்பாவை

எல்லாம் எழுதி முடித்தபின், ஆனந்தக் கூத்தர், "அன்பரே! பாவை பாடிய வாக்கினுல் கோவை பாடும்" என்று அருளிச்செய்தார்; இங்கே பாவை என்பது திருவெம்பாவையைக் குறிக்கும். திருவாசகத்துக்குள் 'பாவை பாடிய வாய்' என்று இதனைச் சிறப்பித்துக் கூறினுர். எனவே திருவெம்பாவை ஒப்புயர்வற்ற உன்னத வாக்கு.



மார்கழிச் சிறப்பு

இதற்கு மற்ருெரு சிறப்பும் உண்டு. மார்கழி மாதத்தில் பன்னிரு திருமுறைகளையும் திருக்காப்பிட்டு வைத்துவிட்டு, இந்தத் திருவெம்பாவை ஒன்றை மட்டுமே ஓத வேண்டும். இது இன்றும் நிகழ்கிற ஆன்ருேர் மரபு.

மார்கழி மாதம் சிறந்த மாதம்; கல்வியிற் சிறந்தவர் சூரியமூர்த்தி; அவர் தேவகுருவாகிய வியாழ பகவானுடைய வீடாகிய தநுர் ராசியில் சஞ்சரிக்கிற மாதம் மார்கழி. அதனுல் அந்த மாதம் உயர்ந்தது. கண்ணபிரான் கீதையில், "அர்ஜுனு! நான் மாதங்களில் மார்கழி மாதமாக இருக்கிறேன்" என்கிருர். மார்கழி தீட்சைக்கு உரிய மாதம்.

இனி, பூலோக கைலாசமாகிய சிதம்பரத்தில் திருவாதிரைத் திருவிழாவும், பூலோக வைகுந்தமாகிய ஸ்ரீரங்கத்தில் ஏகாதசி நல்விழாவும் நடைபெறுவது மார்கழியில்தான்.

வைகறை வழிபாடு

மார்கழி மாதம் வைகறையில் செய்யும் வழிபாட்டைப் பற்றிச் சிவாகமத்தில் ஒரு வசனம் வருகிறது :—

சாபகத-பாநுதிவாஸாந்த்ய-நிசிகாலே,
ஆதிசிவதேவ்யா ஸஹ ஏகதிநபூஜா |
ஏகதிநபூஜாபலம் கோடிதிநே நாஸ்தி
இந்த்ரபதி-இந்த்ரசிவகோடிதிந-வாஸம் ||

இதன் பொருள் :- சாபம்- வில், கத-அடைவது. தநுர் ராசியில் சூரியன் சஞ்சரிக்கிற மாதமாகிய மார்கழியில் விடியற்காலத்தில், உமையம்மையுடன் கூடிய சிவபெருமானை ஒரு நாள் வழிபடுவார்களாயின், அந்த ஒரு நாள் பூஜைக்கு, மற்ற நாள்களில் கோடி நாள்களின் பூஜை நிகராகாது. மேலும், மார்கழி மாதம் விடியற்காலையில் ஒரு நாள் சிவமூர்த்தியை வழிபட்டவர்கள் இந்திரனைப் போன்ற சிறப்புடன் சிவபோகத்தில் இந்திரனுடைய நாள்களில் கோடி நாள்கள் இன்புற்று இனிது வாழ்வார்கள்.

நமது ஆண்டுகளில் முந்நூற்றறுபது கொண்டது ஒரு தேவ ஆண்டு.

பாராயணப் பலன்

உத்தமமான பிறப்பெடுத்த நாம் இத்தகைய புனிதமான மார்கழி மாதம் விடியற்காலையில் துயின்று அவமே காலத்தைப் போக்காமல் துயிலெழுந்து நீராடி நீருடித் திருவெம்பாவை திருப்பள்ளியெழுச்சி என்ற இரு நூல்களையும் பக்தி பரவசத்துடன் பாராயணம் புரிதல் வேண்டும். அங்ஙனம் புரிவோர்க்கு ஆணவ இருள் நீங்கிச் சிவஞான ஒளி உண்டாகும்.

மாணிக்கவாசக சுவாமிகள் திருவண்ணாமலையில் அருளிச்செய்த திருவெம்பாவை, நவசக்திகளும் தமக்குள் துயில் உணர்த்தும் தன்மையை உணர்த்துவது.

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ? வன்செவியோ நின்செவிதான்?
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மி விம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டு இங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே
ஈதே எந்தோழி பரிசு? ஏல் ஓர் எம்பாவாய்.

அருள்ஜோதி

இறைவன் ஜோதிமயமானவன். அருட்பெருஞ் ஜோதி இன்ன காலத்திலே தோன்றிய ஜோதி என்ற காலவரம்புக்கு உட்படாதது; அதற்கு முடிவுமில்லை; முதலும் முடிவும் இல்லாத அருமை பெருமையுடையது.

"ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதி"

என்ன அருமையான அமுதவாக்கு! தித்திக்கின்ற தேனமுத வாக்கு.

"வாள் தடம் கண் மாதே!"—ஒளிபெற்ற விசாலமான கண்களையுடைய பெண்ணே!

'ஒளியும் அகலமும் படைத்த கண்ணுடையவளே' என்று அழைத்ததனாலும், இப்போது துயில்கிறபோது இருளும் குவிதலும் பூண்டிருக்கிற கண் என்பதனைக் குறிப்பிடுகிறது. உய்த்துணர வைத்தல் என்ற உத்தி.

"வளருதியோ?"—இன்னும் நீ கண்வளரலாமோ?

"வன் செவியோ நின் செவிதான்?"—உனது மென்மையான காது என்ன வன்மை பெற்றதா?

அன்பின் காட்சி

மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே.

நாங்கள் வீதியில் தேவதேவனாகிய சிவபெருமானை வாழ்த்திய ஒலியைக் கேட்ட மாத்திரத்தில்

விம்மி விம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டு இங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள்; என்னே! என்னே!

அன்புள்ள ஒருத்தி ஆனந்த மேலீட்டாலும் அன்பின் உணர்ச்சியாலும் விம்மி விம்மி, தன் உடம்பை மறந்து, மலர் நிறைந்த படுக்கையின்மீது புரண்டு தன் வசம் இழந்து, ஒன்றையும் உணராது கிடக்கிறாள். இதோ பார் இந்த அன்பின் காட்சியை!

"ஈதே என் தோழி"—எமது தோழியே! இது அல்லவா சிவபக்தி? என்ன அதிசயம்! நீ பார்!

"பரிசு ஏல் ஓர்"—இத்தன்மையை நீ ஏற்று ஆராய்ந்து பார்!

"எம்பாவாய்"—எமது பாவை போன்றவளே!

இத்தகைய அற்புதமான இனிய பாடல்களாகிய திருவெம்பாவையை அன்பர்கள் மார்கழி மாதம் வைகறையில் தவறாது ஓதி, அகம் புறம் என்ற இரு இடங்களிலும் நின்று சிவனருளால் இகம் பரம் என்ற இருமை நலன்களையும் பெறுவார்களாக. ○



நான் சிற்றறிவு கொண்டிருந்த காலத்தில் மதங்கொண்ட யானையைப் போல் உலகில் எவரையும் மதிக்காமல், நானே அறிவாளி என்று மதங் கொண்டிருந்தேன். என் மனம், 'எல்லாமறிந்தவன் நீ' என்று என்னை உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தது. நான் கண்மூடித்தனமாகச் செயலாற்றி வந்தேன். மெள்ள மெள்ள அறிவாளிகளின் இடையே இருக்கும் வாய்ப்புக் கிட்டியது. அவர்களுடைய பழக்கத்தால் நல்ல விஷயங்களை உணரும் நிலை ஏற்பட்டது. அப்போது அந்தச் சமயத்தில், நீண்ட நாள் உடலை வாட்டிய காய்ச்சல் சிறந்த மருந்து உண்டவுடன் விலகிப் போவது போல், என் உள்ளத்துள் நீண்ட நாள் குடிகொண்டிருந்த அகம்பாவம், மமதை முதலிய துர்க்குணங்கள் மறைந்துவிட்டன.

—பர்த்ருஹரி (நீதி சதகம்)

ஆண்டாள் கேட்ட வரம்

சிலம்புச்செல்வர் ம. பொ. சிவஞானம்

ஆண்டாள் 'திருப்பாவை' பாடினுர். வாதவூரடிகள் திருவெம்பாவை பாடினுர். இருவருடைய பாடல்களும் உறங்கிக் கிடக்கும் ஆன்மாக்களுக்கு விழிப்பூட்டுபவையாகும். ஆம், ஆண்டாளும் அடிகளாரும் அன்னையும் தந்தையுமாக வந்து உறங்கும் ஜீவான்மாக்களை எழுப்புகின்றனர். இது தான் பாவை இலக்கியத்தின் பொருள்.

பாவைப் பாடல்களிலே, முதலில் விழித்துக் கொள்ளும் கன்னியர்கள், விழித்ததும் படுக்கையை விட்டு எழாத தோழியரை எழுப்புகின்றனர். ஆம், பக்குவப்பட்ட ஜீவான்மா-இறையருளால் முதலில் விழிப்புப் பெற்ற ஜீவான்மா-உறங்கும் ஆன்மாவை எழுப்புவதைப் போல.

திருப்பாவை—திருவெம்பாவைப் பாடல்கள் பாவை நோன்புக்காகப் பாடப்பட்டவையாகும். வைணவருக்கு ஒரு பாவை நோன்பு, சைவருக்கு ஒரு நோன்பு என்று இரண்டு நோன்புகள் இல்லை. இருப்பினும், அவ்விரண்டும் இறைவனை வழிபடும் நோன்புகளே.

'ஆத்திகம்' என்ருலே உலகியலை மறப்பதும் துறப்பதும்தான் என்று சிலர் எண்ணுகிருர்கள். இது பிழை. வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த பின்னரே வானுறையும் தெய்வமாக விளங்கினர் முற்கால ஞானியர். இந்த உண்மையைத் 'திருப்பாவை' யாலும் அறியலாம்.

ஓங்கி உலகளந்த உத்தமன் பேர் பாடி
நாங்கள் நம் பாவைக்குச் சாற்றி நீராடினல்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து
ஓங்கு பெருஞ் செந்நெ லூடு கயல் உகளப்
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்பத்
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய்

என்ற பாடலிலே, உலகியல் வாழ்வையே குறிப்பிடுகிருர் நாச்சியார். ஆம், மாதம் மும்மாரி பெய்ய வேண்டும் என்று பிரார்த்திக்கிருர். அதுவும் தமிழகத்திலோ பாரதத்திலோ மட்டுமல்லாமல், உலகில் எத்தனை நாடுகள் உண்டோ அத்தனை நாடுகளிலும் பெய்ய வேண்டும் என்கிருர். நாச்சியார் மழை வளம் வேண்டுவது வயல்வளத்துக்காகத்தான். இதனை, 'ஓங்கு பெருஞ் செந்நெலூடு கயல் உகளப் பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்ப' என்னும் வாசகத்திலே புலப்படுத்துகிருர். அவர் வயல்வளம் வேண்டுவது மக்கள் வயிரூர உண்ணத் தான். இன்னும் பால்வளமும் வேண்டுகிருர். குடங் குடமாகப் பால் கொடுக்கும் பெரும் பசுக்கள் நீங்காச் செல்வமாக நாட்டில் என்றென்றும் நிறைந்திருக்க வேண்டும் என்று பிரார்த்திக்கிருர். வானத்தை நோக்கி, "நாங்கள் வாழ உலகினில் பெய்திடாய், பெருமழையே!" என்று பிரார்த்திக்கிருர். ஆண்டாள் விரும்பும் சோறு,வெறும் சோறு



அன்று; நெய்ச்சோறு. கரண்டி நெய்யன்று; ஒருபிடி நெய்ச் சோற்றைக் கையிலெடுத்தால் அதிலிருந்து முழங்கைவரை நெய் ஒழுக வேண்டுமாம்! இன்னும் உடலை அலங்கரிக்க என்ன என்ன அணிகள் வேண்டுமோ அவை எல்லாம் வேண்டும் என்று ஆண்டவனைக் கேட்கிருர் ஆண்டாள் :—

கூடாரை வெல்லும் சீர்க் கோவிந்தா! உன்றன்னைப்
பாடிப் பறை கொண்டு யாம் பெறும் சம்மானம்
நாடு புகழும் பரிசினுல் நன்ருகச்
சூடகமே, தோள்வளையே, தோடே, செவிப்பூவே,
பாடகமே என்றனைய பல்கலனும் யாம் அணிவோம்;
ஆடை உடுப்போம்; அதன் பின்னே பாற்சோறு
மூட, நெய்பெய்து முழங்கை வழிவாரக்
கூடியிருந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய்.

இந்தப் பாடலிலே, கோவிந்தனைப் பார்த்து, "உன்னைப் பாடிப் பரவும் எங்களுக்கு நீ தர வேண்டிய சம்மானங்கள் எவை தெரியுமா?" என்று கேட்டு, தாம் விரும்பும் சம்மானங்களைப்

பட்டியல் தயாரித்துக் காட்டுகிறார். அதில் சூடாமணி, வளை, தோடு, பூ, பாடகம் எனப் பெயர்களைச் சொல்லி, இவை போன்ற இன்னும் பல அணிகள் தருமாறு வேண்டுகிறார். அவற்றோடு உடுக்க நல்ல ஆடையும் வேண்டுமாம். ஆடையும் அணிகலன்களும் இருந்தால் போதுமா? பால் சோறும், நெய்ச்சோறும்கூட வேண்டும் என்கிறார். அதனையும் தாம் மட்டும் தனித்திருந்து உண்ண விரும்பாமல், பல்லாரோடும் கூடியிருந்து உண்ணும் வாழ்க்கையை வேண்டுகிறார்.

உலகியலை மறந்த இலக்கியம் வாழ முடியாது. மதமும் அப்படித்தான். உலகியல் வாழ்வையே முதலும் முடிவுமாகக் கருதுவது ஞானமாகாது. அது அஞ்ஞானம். அதனால்தான் வானுறையும் தெய்வமாக மனிதன் மாறக்கூடிய வகையில் மண்ணுலகில் அவன் வாழ்க்கை அமைய வேண்டும் என்றனர் ஆண்டாளும் அடிகளாரும்.

ஓர் ஆண்டுக்கு உள்ள பன்னிரண்டு திங்களிலே, ஒரு திங்கள் முழுவதிலும் பாடியே வாழும் சாதி உலகத்தில் ஒன்று உண்டானால் அது தமிழ்ச் சாதிதான்.

பழங்காலத்தில் மார்கழித் திங்கள் முழுவதும் ஊர்தோறும் பண்ணிசைக்கும்; ஊரிலுள்ள வீதிதோறும் பாட்டொலிக்கும்; வீதியிலுள்ள வீடுதோறும் பா மணக்கும். பிற்காலத்தில் இந்த வழக்கம் மறையத் தொடங்கியதனால் மார்கழித் திங்களின் விடியற்காலையிலே உறங்குகிறவர்களின் செவிகளிலே ஒலிக்கும்படியாக வீதிகளில் பண்டாரங்கள் பாடிச் சென்றார்கள். இந்நாளில் அந்தப் பண்டாரங்களையும் காணோம். பழக்க வழக்கங்களிலே சிலவற்றைக் கைவிடலாம். சடங்குகளிலே பலவற்றைத் துறக்கலாம். ஆனால் பக்தியை மட்டும் எந்த நிலையிலும் எக்காரணத்தை முன்னிட்டும் துறந்துவிடக் கூடாது. பக்திநெறி அழியுமானால் மனித சமுதாயத்திடம் எஞ்சியுள்ள பண்பாடுகளும் அழியும்.

திருப்பாவையும் திருவெம்பாவையும் பெண்கள் பாடுவதற்கென்றே இயற்றப்பட்டவையாகும். இந்நாளில் 'பாவை நோன்பு' வழக்கத்தில் இல்லை. பாவைப் பாடல்களைப் பாவையர் பாடுவதுமில்லை. பாவையர்கள், விடியற்காலையிலே பாவைப் பாடல்களைப் பாடிச் செல்வார்களானால், அவர்களுக்குப் பாதுகாப்புத் தரும் பண்பும் சமுதாயத்தில் இல்லை. அதனால், பெண்கள் பாட வேண்டிய பாவைப் பாடல்களை ஆண்கள் பலர் கூடிப் பாடிச் செல்லப் பார்க்கிறோம். அந்த மட்டில் அவர்களேனும் பாடுகிறார்களே என்று ஆறுதலடைகிறோம். ●



சிந்தனையற்ற அறிவிலிகள், கர்ம காண்டத்திலுள்ள இனிமையான வார்த்தைகளால் மயங்கிவிடுகிறார்கள். எனவே செல்வத்தையும் சொர்க்கத்தையும் தவிர உயர்ந்தது வேறு எதுவுமில்லை என்று அவர்கள் கருதுகிறார்கள். அவர்கள் பலவேறு ஆசைகளுக்கு இலக்காகிப் பலவிதமான சடங்குகளைச் செய்து சொர்க்கத்தை அடைகிறார்கள். பிறகு மறுபடியும் பிறப்பு இறப்புச் சுழல்களில் சிக்கிக்கொள்கிறார்கள். போகங்களில் ஆசை கொண்ட அவர்களின் மனம் ஆன்மிக விஷயங்களில் ஈடுபடுவதில்லை.

—ஆதி சங்கரர்

பாரத யுத்தம் முடிந்துவிட்டது. சகாதேவன், கிருஷ்ணனின் பேரருளையும் உதவியையும் பாராட்டுகிறான். கிருஷ்ணன் பதில் சொல்கிறான்: "எனக்கு மாபெரும் குறையுள்ளது. நான் என்ன பெரிய உதவி செய்துவிட்டேன்! கஷ்டம் வருவதற்கு முன்பு அதைத் தடுப்பதுதானே உதவி? கஷ்டம் வந்து அனுபவித்த பிறகுதானே என்னால் உதவ முடிந்தது? கஜேந்திரன் 'ஆதிமூலமே' என்று அலறினான். அதன் பின்புதான் அவனைக் காப்பாற்ற முடிந்தது. திரௌபதியின் உதவிக்கும் கடைசி நேரத்தில்தான் வர முடிந்தது. பக்தர்களுக்கு இடுக்கண் வருவதை என்னால் தடுக்க முடியவில்லையே!"

—தூப்புல் ஸ்ரீ லட்சுமிநரசிம்மன்



எல்லாம் நன்மைக்கே

ராஜி வேங்கடேசுவரன்

முன்னெரு காலத்தில் மாதவிபுரி என்ற தேசத்தை ஓர் அரசன் ஆண்டு வந்தான். அவனது அவையில் மதிவாணர் என்ற ஓர் அமைச்சர் இருந்தார்.

அரசன் எங்கே சென்ருலும் மதிவாணரையும் உடன் அழைத்துச் செல்வது வழக்கம். மதிவாணர் கடவுள்பக்தி நிரம்பியவர். 'அவனன்றி ஓர் அணுவும் அசையாது' என்ற ஆழ்ந்த நம்பிக்கை அவருக்கு இருந்தது. ஆகவே அவர் எது நடந்தாலும் அது கெட்டதா நல்லதா என்று ஆராயாமல் 'எல்லாம் நன்மைக்கே' என்று நம்பி வந்தார். இது காரணமாக அரசவையில் இருந்த மற்றவர்களின் வெறுப்பிற்கு அவர் ஆளானுர்.

ஒரு நாள் அரசனின் கைவிரல்களில் ஒன்று கத்தியால் வெட்டுண்டது. அரசவையில் இருந்தவர்கள் அனைவரும் இதுபற்றி அரசனிடம் விசாரித்துத் தங்கள் அனுதாபத்தைத் தெரிவித்தனர். இறுதியில் மதிவாணர் வந்தார். அவர், "அரசே! இதுவும் நன்மைக்கே என்று எடுத்துக்கொள்ளுங்கள். காரணம் இல்லாமல் இப்படி ஒரு காரியம் நடந்திருக்காது. கடவுளைப் பிரார்த்தனை செய்யுங்கள். தலைக்கு வந்தது தலைப் பாகையோடு போயிற்று என்பது போல, மீதி விரல்கள் சேதமாகாமல் இருந்ததற்காகக் கடவுளுக்கு நன்றி கூறுங்கள்" என்று அமைதியுடன் கூறினுர்.

சூழ்ந்து இருந்தவர்கள் மதிவாணர் சொன்னதைக் கேட்டு வெகுண்டு எழுந்தனர். "அரசே! அமைச்சர் தங்களுக்கு நடந்த விபத்திற்கு வருந்தவில்லை. மாருக மகிழ்ச்சி அடைகிருர். இதுவும் நன்மைக்கே என்று எடுத்துக்கொள்ளும்படி அறிவுரை தருகிருர். விரல் வெட்டுண்டது எப்படி, என்ன நன்மையைத் தரும்?" என்று பலவாறு தூண்டி அரசனுக்கு மதிவாணர் மீது கோபம் ஏற்படச் செய்தனர். அரசன் அமைச்சரைச் சிறையில் அடைக்கக் கட்டளையிட்டான்.

நாட்கள் சென்றன. ஒரு நாள் அரசன் தன் மற்ற மந்திரிகளுடனும் வீரர்களுடனும் வேட்டைக்குச் சென்ருன். வேட்டையாடும்போது துரதிர்ஷ்டவசமாக அரசன் தன் வீரர்களிடமிருந்து பிரிக்கப்பட்டான். அவன் தனிமையில் அகப்பட்டுக் கொண்டான்.


மாலை வந்தது. அரசனுக்குப் பாதை தவறியது. தவறுதலாகக் காட்டுவாசிகளின் இருப்பிடத்தை அடைந்தான். காட்டுவாசிகள் அப்போது தங்கள் குலதெய்வத்

திற்குப் பூஜை செய்வதில் ஈடுபட்டிருந்தனர். அரசனைக் கண்ட சில காட்டுவாசிகள் அவனைப் பிடித்துக் கொண்டுபோய்த் தங்கள் தலைவன் முன்பு நிறுத்தினர். தலைவனோ, பலி கொடுப்பதற்குச் சகல அம்சங்களுடன் கூடிய ஒரு மனிதன் கிடைத்தான் என்று மகிழ்ந்தான். அவன் தன் வீரர்களை நோக்கி அரசனின் உடலில் ஏதாவது குறை இருக்கிறதா என்று பார்க்கச் சொன்னான். வீரர்கள் அவன் சொன்னபடி செய்தனர். விரல் ஒன்று கைகளில் குறையக் கண்டு அரசனை விட்டுவிட்டனர்.

அரசன் பல துன்பங்களுக்கிடையில் தன் நாடு வந்து சேர்ந்தான். மந்திரி மதிவாணர் கூறிய சொற்களை நினைத்துக்கொண்டான். மந்திரியை விடுதலை செய்து தன் முன் அழைத்து வரக் கட்டளையிட்டான். அமைச்சர் வந்ததும் அவரிடம் நடந்த விஷயங்களை விவரித்தான். பிறகு அரசன், ''மதிவாணரே! நீங்கள் சொன்னபடி என் விரல் ஒன்று போனது நன்மைக்கே என்பது இப்போது தீர்மானமாகிவிட்டது. ஆனால் உங்களைச் சிறையில் இட்டது தங்களுக்கு எப்படி நன்மையாகும்?'' என்று கேட்டான்.

மதிவாணர் அரசனை வணங்கினர். ''அரசே! ராஜகாரியங்கள் இல்லாததனால் இவ்வளவு நாட்களும் சிறையில் இறைவனை வணங்க எனக்கு நிறைய நேரம் கிடைத்தது. இரண்டாவதாக, அன்று நான் சிறையில் இல்லாவிட்டால் உங்களுடன் வேட்டைக்கு வர நேர்ந்திருக்கும். உங்களுடன் நானும் சேனைகளை விட்டுப் பிரிந்திருப்பேன். காட்டுவாசிகள் உங்களை விட்டு, என்னைப் பலி கொடுத்திருப்பார்கள். ஆகவே என்னைச் சிறையில் அடைத்ததும் நன்மைக்கே'' என்று விளக்கினர்.


காரணம் கேட்ட அரசன் மகிழ்ந்தான். மதிவாணரிடம் தன்னை மன்னிக்கும்படி வேண்டினன். அன்று முதல் அரசனும் இறைவனிடம் மாருத அன்பு கொண்டு நாட்டிற்குப் பல நன்மைகள் செய்து வாழ்ந்து வரலானன்.



வைஷ்ணவன் என்பவன் நெற்றியில் திருநாமத்தைச் சாற்றிக்கொண்டிருக்கும் ஒரு குறிப்பிட்ட சமூகம் என்பது தவருன கண்ணோட்டமாகும். பண்டைய நூல்களில் கூறியிருப்பதைப் போல ஓர் உண்மை வைஷ்ணவன் இரக்கத்திற்கும் நேர்மைக்கும் எடுத்துக்காட்டானவன்; தன்னிடம் விரோதம் காட்டுபவர்களிடங்கூட வெறுப்பைக் காட்டாதவன்; தன்னுடைய சமுதாயம் வாழ வாழ்த்துக் கூறுபவன். வைஷ்ணவனைக் கங்கை நதியோடு ஒப்பிடலாம். எப்படிக் கங்கை நதியில் மூழ்கியவர்களுக்குப் பாவம் களைகிறதோ, அது போன்று வைஷ்ணவனுடன் தொடர்பு வைத்துக்கொள்பவருக்கு மனஅமைதி கிட்டும். வைஷ்ணவன் தன் அறிவை மற்றவர்களுடன் பகிர்ந்து நடந்து கொள்ளுவதில் விருப்பம் உடையவன். பீஷ்மரைப் போல் இனிமையாகப் பேசுபவன்.

ஓர் உண்மை வைஷ்ணவனை சிறந்த இசை வல்லுநனுக்கு ஒப்பிடுவார்கள். எப்படி இசைவல்லுநன் எல்லோரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்துகிருனே அதைப் போல, அனைவரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்துபவன் வைஷ்ணவன். பாண்டவர்கள் இந்த இயல்புடைய மக்களோடு ஒப்பிடப்படுகிருர்கள். இத்தகைய குணங்களையுடைய மனிதர்கள் சமூகத்தில் நிலவுவதனல் நாட்டில் ஒற்றுமையும் செழிப்பும் நிலவும்.

T. S. பாலகிருஷ்ண சாஸ்திரிகள்



கடவுளைக் காட்டும் பாதைகள்

ஸ்ரீமத் சுவாமி வீரேச்வரானந்தஜி மகாராஜ்
தலைவர், ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்—சங்கம்

தியானம்

நாம் தியானம் செய்ய உட்கார்ந்தோமானால் உடனே எல்லா வகையான நினைப்புகளும் நம் மனதில் ஒன்றன்பின் ஒன்றாகக் கிளம்புவதைக் காணலாம். இதற்கு முன்னால் நாம் நினைத்தே பார்த்திருக்காத நினைப்புகள்கூட அப்போது மனதில் எழுந்து ஓடி வரும். இதைக் கண்டு நமக்கே ஆச்சரியமாக இருக்கும். இந்த நினைப்புகள் எல்லாம் அடி மனதில் இருந்தவை.

இத்தகைய நிலையில் மனதை ஒருமைப்படுத்த நாம் செய்ய வேண்டியதெல்லாம் அந்த நினைப்புகளில் சிறிதும் கவனம் செலுத்தாமல், அவற்றை ஒதுக்கிவிடுவதுதான். அப்படிச் செய்தால் அவை கொஞ்சம் கொஞ்சமாகத் தாமாகவே மறைந்து போவதைக் காணலாம். அப்படிச் செய்யாமல் நாம், 'நான் அந்த நினைப்புகளை விரட்டுகிறேன், ஒடுக்குகிறேன்' என்று ஏதாவது செய்யத் துவங்கினால், அவை கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து வலிமை பெற்று நம் மனம் முழுவதையும் ஆக்கிரமித்துக் கொள்வதைப் பார்க்கலாம். எனவே தியான நேரத்தில் தோன்றும் தேவையில்லாத நினைப்புகளை நீக்குவதற்கு உரிய ஒரே வழி அவற்றுக்குச் சிறிதும் மரியாதை கொடுக்காமல் ஒதுக்கி விலக்கிவிடுவதுதான்.

விலக்கக் கடினமான நினைப்புகள்

ஆனால் சில நினைப்புகள் உள்ளன. அவற்றை நீக்குவது நமக்குக் கடினமாக இருக்கும். அவை நம் மனதில் படிந்திருக்கிற, நாம் அன்றாடம் செய்கிற வியாபாரம், தொழில் இவை போன்றவை பற்றி எழுகிற நினைப்புகளாகும். இவற்றை நம் மனதிலிருந்து சாதாரணமாக விலக்குவது கடினமாக இருப்பதால் கீழ்வரும் இரண்டு வழிகளில் ஏதாவது ஒரு வழியைப் பின்பற்றி இவற்றை விலக்கலாம். ஒரு வழி : நம் மனவலிமை முழுவதையும் திரட்டி அந்த நினைப்புகளைத் துரத்திவிட்டு மனதிடம், 'இனிமேல் இத்தகைய நினைவுகளை நினைக்காதே! ஏதாவது நினைக்க வேண்டும் என்றால் கடவுளைப்பற்றி நினை. வேறு எதைப் பற்றியும் நினைக்காதே. இதை நன்றாக நினைவில் வைத்துக்கொள்' என்று உறுதியாகச் சொல்ல வேண்டும். இந்த முறையில், மேற்கூறிய தொழில், வியாபாரம் பற்றிய நினைப்புகள் வரும்போதெல்லாம் மனதின்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். சின்னக் குழந்தையைத் தவறு செய்ய வேண்டாம் என்று தண்டித்து நல்வழிப்படுத்துவது போல, மனதையும் நல்வழிப்படுத்த வேண்டும். நீங்கள் உங்கள் மனவலிமையைப் பயன்படுத்தி மனதை இவ்வாறு அடக்கத் தொடங்கினீர்களேயானால் நாளாக நாளாக மனம் அடங்கித் தூய்மை பெறுவதை நீங்கள் காணலாம்.

மற்றொரு வழி

இன்னொரு வழியும் இருக்கிறது; அது மனதிற்கு அறிவுரை கூறித் திருத்தும் வழியாகும். மனம் இவ்வாறு தொழில் மீதும், மற்றப் பொருள்கள் மீதும் அலைந்து செல்லும்பொழுது அதனிடம், 'ஏன் இப்பொழுது உபயோகமே இல்லாத இந்த மோசமான பொருள்களை நினைக்கிறாய்? எல்லாவற்றுக்கும் மேலான இறைவனை நினைத்தால் நீ ஆனந்தமாக அல்லவா இருப்பாய்? அவரை நினை' என்று சொல்ல வேண்டும். இப்படி மனதிற்கு நாம் அடிக்கடி அறிவுரை கூற வேண்டும். ஒரு சிறிய குழந்தை கொஞ்சம் கொஞ்சமாக நம் அறிவுரையை ஏற்றுக் கொள்வது போல மனமும் நம் அறிவுரையை ஏற்றுக் கொள்ளும். தியான நேரத்தில் எழுந்து நம் மன அமைதியைக் குலைக்கும் உலக நினைவுகள் படிப்படியாக அடங்கிவிடும். இவற்றை எல்லாம் நீங்கள் நிதானமாகவும் முறையாகவும் செய்ய வேண்டும்.

அர்ஜுனன் கேட்கிறான்

மனதை அடக்குவது என்பது ஒரு நாளிலோ இரண்டு நாளிலோ முடிந்துவிடுகிற காரியம் அல்ல. தியானம் சுலபமாகக் கைகூடுவதில்லை. அது

மிகவும் கடினமானது என்பது நம்மைப் போன்ற சாதாரண மனிதர்களுக்கு மட்டும் அல்ல, அர்ஜுனனைப் போன்ற வீராதிவீரனுக்கும் அது பெரிய கடினமான காரியமாகவே உள்ளது. ஸ்ரீகிருஷ்ணர் தியானத்தைப் பற்றி அர்ஜுனனுக்கு அறிவுறுத்தியபோது அதைக் கேட்ட அர்ஜுனன், "நீங்கள் எதை எனக்குப் போதிக்கிறீர்களோ அந்தத் தியானயோகம் என்னால் அடையக்கூடியது அல்ல. ஏனென்றால் மனதைக் கட்டுப்படுத்துவது என்பது மிகவும் கடினமாக உள்ளது. மனதைக் கட்டுப்படுத்தி அடக்குவது காற்றைக் கட்டுப்படுத்தி அடக்குவதைவிடக் கடினமாக இருக்கிறது'' என்று கூறுகிறான்.

ஸ்ரீ கிருஷ்ணரின் பதில்

ஸ்ரீகிருஷ்ணர் அர்ஜுனன் கூறியதைக் கேட்டதும் அது உண்மைதான் என்று ஏற்றுக்கொண்டு, "அர்ஜுனா, நீ சொல்வது உண்மைதான் என்றாலும் மனதை அடக்கலாம். இடைவிடாத கடினமான பயிற்சியின் மூலமும், ஆசைகளை விடுவதன் மூலமும் மனதை அடக்க முடியும்'' என்கிறார்.

பதஞ்சலி முனிவர்

பதஞ்சலி முனிவர்கூட, "பயிற்சி, ஆசைகளை அகற்றுவது என்னும் இரண்டு வழிகளின் மூலமாக மனதைப் பலவேறு நினைப்புகளாகச் சிதறுவதிலிருந்து அடக்கலாம்'' என்று கூறுகிறார்.

ஆகவே, தியான நேரத்தில் கட்டுக்கடங்காமல் அலையும் மனதைக் கட்டுப்படுத்துகிற வழிகள் இவையே ஆகும்.

தொடர்ந்து பயிற்சி செய்ய வேண்டும்

மனதைக் கட்டுப்படுத்த நாம் தொடர்ந்து பயிற்சி செய்ய வேண்டும். பயிற்சி என்பது, தியானத்தில் எப்போதெல்லாம் தியானிக்கும் தெய்வத்தைப் பற்றிய நினைவிலிருந்து மனம் மாறுபட்டு விலகிச் செல்லுகிறதோ, அப்போதெல்லாம் அதைப் பிடித்து இழுத்து வந்து மறுபடியும் அந்தத் தெய்வ நினைவிலேயே படியுமாறு செய்வதாகும். இவ்வாறு மனம் எப்பொழுதெல்லாம் தியானிக்கும் தெய்வத்திடமிருந்து விலகிச் செல்லுகிறதோ அப்போதெல்லாம் அதைப் போய்ப் பிடித்து இழுத்து வந்து மறுபடியும் அந்தத் தெய்வத்தின் மீது படிய வைக்க வேண்டும். இந்தப் போராட்டம் தொடர்ந்து நடந்துகொண்டே இருக்க வேண்டும். இது மிகவும் அவசியமானதாகும்.

[தொடரும்]

வேம்பனூர் வெள்ள நிவாரணம்

திருச்சிக்கு அருகிலுள்ள வேம்பனூரில் இருபத்தாறு வீடுகளை கடந்த ஆண்டு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் கட்டி கொடுத்த விவரம் சென்ற இதழில் கட்டுரையாக இடம் பெற்றிருந்தது.

அடுத்து வேம்பனூர் அருகில் உள்ள மூவாரைப்பட்டி (முரியாப்பட்டி)யில் 29-10-78ஆம் நாள் ஸ்ரீமத் சுவாமி ரங்கநாதானந்தஜி மகராஜ் அவர்கள் இருபத்தாறு வீடுகளைத் திறந்து வைத்து, வீடு இழந்த 30 குடும்பங்களுக்கும் பட்டா வழங்கினார். இந்தக் குடியிருப்புப் பகுதிக்கு 'ஸ்ரீராமகிருஷ்ண — விவேகானந்தபுரம்' என்ற பெயர் வழங்கப்பட்டது.

அடுத்து மாலையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்திற்கு திருச்சி மாவட்ட கலெக்டர் திரு. P. சங்கர் அவர்கள் தலைமை வகித்தார். சென்னை ஸ்ரீராமகிருஷ்ண மிஷனின் செயலாளர் ஸ்ரீமத் சுவாமி கீர்த்திதானந்தர் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். கூட்டத்தில் ஸ்ரீமத் சுவாமி ரங்கநாதானந்தஜி மகராஜ், ஸ்ரீமத் சுவாமி சர்வக்ஞானந்தஜி மகராஜ், தென் பிராந்திய இந்திய ராணுவத்தைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் S. P. மகாதேவன் அவர்கள் ஆகியோர் பேசினர்.

வேம்பனூரில் ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் புதுப்பித்த பழைய 'ஸ்ரீ ஆளவந்த பிடாரி அம்மன்' என்னும் ஆலயத்திற்கும் விமரிசையாக கும்பாபிஷேகம் நடைபெற்றது.

அன்று நாள் முழுவதும் நடைபெற்ற நிகழ்ச்சிகள் அனைத்துமே 17-8-78ஆம் நாள் வேம்பனூரில் நடைபெற்ற முதலாவது குடியிருப்பு விழாவைப் போன்றே அமைந்திருந்தன.

அருள்நெறிக் கதை

தர்மதத்தர் செய்த தானம்

> இராமாயணத்தில் பிரசித்தி பெற்ற கைகேயியின் முற்பிறவியைப் பற்றிக் கூறும் கதை இது.

முன்னொரு காலத்தில் ஸஹ்யாசலம் என்ற மலையின் அடிவாரத்தில் கரவீரபுரம் என்ற ஊர் இருந்தது. அங்கே தர்மதத்தர் என்ற உத்தம அந்தணர் வாழ்ந்து வந்தார். அவர் ஒரு சமயம் தமது வழக்கப்படி கார்த்திகை மாதத்தில் ஏகாதசி யன்று விரதமிருந்தார். அன்றிரவு கண்விழித்து இறைவனை வழிபட்டு, இரவின் கடைசிப் பகுதியில் பூஜைக்கு வேண்டிய சாமான்களைச் சேகரித்துக் கொண்டு கோயிலை நோக்கிச் சென்றுகொண் டிருந்தார்.

பாதி வழியில், பயங்கரமாகச் சப்தமிட்டபடி ஓர் அரக்கி வெகு வேகமாக ஓடி வருவதைக் கண்டார். பாவம்! பட்டினி கிடந்து சோர்வுற் றிருந்த தர்மதத்தரின் உடல் பயத்தால் நடுங்கத் தொடங்கியது. அவரது வாய் கடவுளின் நாமத்தை உச்சரித்துக்கொண்டிருந்தது. தன்மீது அரக்கி பாய்ந்துவிடுவாள் என்று தோன்றவே, தர்மதத்தர் தமது கையில் இருந்த பூசைத் தட்டை அவள்மீது தூக்கி எறிந்தார்.

சிறந்த பக்தரும், ஏகாதசியன்று உபவாசம் இருந்தவருமான தர்மதத்தரின் கையால் சேகரிக்கப் பெற்ற துளசிதளம், தீர்த்தம் ஆகியவை அரக்கியின் மீது படவே அவளுடைய பழவினைகள் அகன்றன. அவளுக்குத் தன் முற்பிறவியின் நினைவு வந்தது. உடனே அவள் தர்மதத்தரின் கால்களில் விழுந்து வணங்கினாள். அவரிடம், ''சுவாமி! என் ஊழ்வினைப் பயனாகவே எனக்கு இத்தகைய நிலை ஏற்பட்டு அரக்கியாக அலைந்து அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறேன். மீண்டும் நான் நல்ல நிலையை அடையத் தயவு செய்து எனக்கு ஒரு வழியைச் சொல்லுங்கள்'' என்று வேண்டிக்கொண்டாள்.

'நரேந்திரன்'

தர்மதத்தருக்கு அவள்மீது இரக்கம் உண்டாயிற்று. அவளிடம் அவளுடைய பூர்வஜன்ம வரலாற்றைக் கூறும்படிக் கேட்டார். அரக்கி அந்தணரிடம் தன் முழுக் கதையையும் கூறினாள். அவள் கூறிய கதை இதுதான்:—

முற்காலத்தில் சௌராஷ்டிர நகரில் பிக்ஷு என்ற பெயருடைய அந்தணர் இருந்தார். அவருடைய மனைவியின் பெயர் கலகா. கலகா என்ற பெயருக்குத் தக்கபடி அவளுடைய குணங்களும் செயல்களும் மிகவும் கொடூரமாக அமைந் திருந்தன. அவள் மறந்துங்கூடக் கணவனிடம் அன்பான வார்த்தைகளைப் பேசியது கிடையாது. கணவனின் நன்மையையோ மகிழ்ச்சியையோ கருத்தாலும் நினைக்கமாட்டாள்.

தினமும் சமைப்பாள். சமைத்த உணவில் நல்லனவற்றையெல்லாம் தானே உண்டுவிடுவாள். மிச்சம் மீதி தனக்குப் பிடிக்காதவற்றையே கணவனுக்குக் கொடுப்பாள். அதிகம் கூறுவானேன்? கணவன் எது சொன்னாலும் அதற்கு நேர்மாறான காரியங்களையே அவள் செய்து வந்தாள். நாளடைவில் அதுவே அவளது இயல்பாகப் பதிந்துவிட்டது.

பிக்ஷுவின் நிலையை அறிந்த அவரது நண்பன் ஒருவன் அவரிடம் ஒரு யோசனை தெரிவித்தான். அதாவது பிக்ஷு எதையெல்லாம் மனைவி செய்ய வேண்டும் என்று விரும்புகிறாரோ அவற்றுக் கெல்லாம் நேர்மாறாக அவளைச் செய்யும்படிச் சொல்ல வேண்டும்.

அதன்படி பிக்ஷு நடந்துகொண்டார். அவர் எதையெல்லாம் செய்ய வேண்டாம் என்று சொல் வாரோ அவற்றையெல்லாம் கலகா உடனுக்குடனே செய்து முடித்து வந்தாள்.

ஒரு நாள் பிக்ஷு தமது ஆருயிர் நண்பன் ஒரு வனுக்கு விருந்தளிக்க நினைத்தார். ஆகவே அவர் மனைவியை அழைத்து, "இதோ பார் கலகா! என் நண்பன் இருக்கிறானே, அவன் பெரிய துஷ்டன். அவனை மறந்துங்கூடத் தவறிப்போய் விருந் துண்ண அழைக்கக் கூடாது" என்றார். மறு விநாடியே கலகா, "இல்லவே இல்லை! உங்கள் நண்பரைப் போன்ற மகான் உலகிலேயே கிடை யாது. நான் இன்றைய தினமே அவரை அழைத்து வந்து விருந்து வைக்கப் போகிறேன்" என்று சொல்லிச் சொன்னபடியே செய்தும் காட்டினாள்.

இவ்விதம் தமது விருப்பத்திற்கு நேர்மாறாகத் தெரிவித்தே கலகாவிடம் பிக்ஷு தம் காரியங்களைச் சாதித்துக்கொண்டிருந்தார். இந்த நிலையில் பிக்ஷுவின் தகப்பனாரின் திதி (திவசம்) வந்தது. பிக்ஷு மனைவியை அழைத்து, "நான் என் தகப் பனாரின் திதியைச் செய்யப்போவதில்லை, புரிந்ததா?" என்றார். அவ்வளவுதான், கலகாவிற்கு வந்ததே கோபம்! "உமக்கு என்ன கேடுகாலம் வந்தது? தகப்பனாருக்கு எள்ளுத் தண்ணீர் இறைக்காத நீரும் ஒரு பிள்ளையா? உமது புத்தி போயும் போயும் ஏன் இப்படி ஆகிக்கொண்டு வருகிறது? திவசம் செய்யாவிட்டால் உமது கதி என்ன ஆகும் என்று யோசித்தீரா? இதோ இப்போதே நான் சென்று பிராம்மணருக்குச் சொல்லிவிட்டு வரப்போகிறேன். திவசம் நடந்துதான் ஆகவேண்டும்" என்று கூறிக் கலகா உடனே புறப்பட்டாள்.

பிக்ஷு மனதிற்குள்ளாகச் சிரித்துக்கொண்டார். ஆனால் மனைவியிடம், "வேண்டுமானால் ஒரே ஒரு பிராம்மணருக்கு மட்டும் சொல்லிவிட்டு வா. அனா வசியமாகச் செலவு வேண்டாம்" என்றார். உடனே கலகா சீறி வெடித்து, "உமக்கென்ன தெரியும்! நீர் பேசாமல் கிடக்க வேண்டியதுதானே!" என்று சொல்லிவிட்டுப் பதினெட்டுப் பிராம்மணர்களை அழைத்துவிட்டு வந்தாள்.

பிக்ஷு திவசத்தன்று காலையில் மனைவியிடம், "நீ பிரமாதமாக எதையும் சமைக்க வேண்டாம். விதம் விதமான பட்சணங்களைப் பண்ணவும் வேண்டாம். வீண் செலவுதானே!" என்றார். கலகாவோ சட் டென்று உடனேயே ஸ்நானம் செய்து, பம்பரமாக வேலை செய்து அறுசுவை உண்டியைப் பிரமாத மாகத் தயாரித்து வைத்தாள்.

மனைவி சமைத்து முடித்தவுடன் பிக்ஷு அவ ளிடம், "முதலில் நாம் இருவரும் சாப்பிட்டு விடுவோம். பிறகு வேண்டுமானால் பிராம்மணர் களுக்குப் படைக்கலாம்" என்றார். கலகாவின் கோபம் எல்லை கடந்துவிட்டது. கணவரை நோக்கி, "திவசமும் அதுவுமாக முதலில் பிராம்மணர்கள் சாப்பிடாமல் நாம் சாப்பிடுவோம் என்று சொல்ல உமக்கு வெட்கமாக இல்லை? ஏன் வரவர உமது அறிவு மழுங்கிக்கொண்டு வருகிறது?" என்று கடு கடுப்புடன் சொல்லிவிட்டு, அந்தணர்களுக்குச் சிறந்த முறையில் உணவு பரிமாறினாள்.


இது போல எதிர்மாறாகச் சொல்லியே பிக்ஷு தகப்பனாரின் திவசத்தை மிகவும் நல்ல முறையில் நடத்தி முடித்தார். கடைசியில் மறதியாக அவர் மாறாகச் சொல்லாமல், "இந்தப் பிண்டங்களை நல்ல தீர்த்தத்தில் (சுத்தமான நீர்நிலையில்) கொண்டு போய்ப் போட்டுவிட்டு வா" என்று மனைவியிடம் சொல்லிவிட்டார். கலகா அகங்காரத்துடன் அந்தப் பிண்டத்தை நாராசத்தில் கொண்டுபோய்ப் போட்டு வந்துவிட்டாள். பிக்ஷுவுக்குக் கோபம் வந்து விட்டது. என்றாலும் அவர் தம்மைச் சமாளித்துக் கொண்டு பழையபடியே எதிர்மறையில், "நாராசத் தில் போட்ட பிண்டங்களை வெளியே எடுத்து வராதே" என்றார்.

அவளோ அவர் சொல்லி முடித்த மறுவினாடியே நாராசத்தில் இறங்கி அந்தப் பிண்டங்களை வெளியே எடுத்து வந்தாள். அப்போது அவர் மீண்டும் கலகாவிடம், "இவற்றை எங்காவது ஒரு நல்ல நீர்நிலையில் கொண்டுபோய்ப் போடக்கூடாது; தெரிந்ததா?" என்றார். கலகா உடனே அவற்றை எடுத்துக்கொண்டு சிறந்த தீர்த்தக்கரைக்குச் சென்று போட்டுவிட்ட பிறகுதான் திரும்பி வந்தாள்.

எவ்வளவு காலம்தான் இப்படிப்பட்ட மனைவி யுடன் காலம் தள்ள முடியும்? பிக்ஷுவுக்கு ஒரு யோசனை தோன்றியது. அதன்படி மறுமணம்

செய்துகொள்ளத் தீர்மானித்து மணப்பெண்ணையும் தேர்ந்தெடுத்துவிட்டார். விஷயம் தெரியவந்ததும் மனம் பொறுத கலகா விஷத்தைக் குடித்துத் தற்கொலை செய்துகொண்டாள்.

யமதூதர்கள் வந்தார்கள். கலகாவை எடுத்துச் சென்று யமதர்மராஜனின் எதிரிலே கொண்டுபோய் நிறுத்தினார்கள். யமதர்மன் சித்திரபுத்திரரிடம் கலகாவைப் பற்றி விசாரித்தார். சித்திரபுத்திரர், அவளுடைய எல்லாச் செயல்களையும் விளக்கமாக எடுத்துச் சொல்லி, ''இவள் நீண்ட காலம் பிரேத உடலுடன் பிசாசாக அலைய வேண்டியதுதான்'' என்று கூறினார்.



யமதூதர்கள் கலகாவைப் பாலைவனப் பகுதியில் தூக்கி எறிந்துவிட்டு வந்தார்கள். கலகாவோ அந்த வழியாக வந்த ஒரு வியாபாரியின் உடலுக்குள் புகுந்துகொண்டாள். கிருஷ்ணவேணி நதியின் கரையில் வியாபாரியின் உடலில் இருந்தபடியே அவள் வந்துகொண்டிருந்தபோது சிவதூதர்களும் விஷ்ணுதூதர்களும் அவளைக் கொன்று வியாபாரியின் உடலிலிருந்து அவளை அப்புறப்படுத்தினர்.

வியாபாரியின் உடலிலிருந்து வெளிவந்த பிறகு, அவள் இங்கும் அங்கும் அலைந்து திரிந்து வேதனைப் பட்டுக்கொண்டிருந்தபோதுதான் கதையின் துவக்கத்தில் கூறிய தர்மதத்தர் எதிரில் வர, அவர் தெளித்த துளசி தீர்த்தத்தினால் அவள் தன் முற்பிறப்பின் நினைவை அறிந்து கொண்டாள். உடனே அவள் அந்தணரை நோக்கி, ''சுவாமி! நான் செய்த தீவினைப் பயனாக இனி எடுக்க வேண்டிய கீழ்த்தரமான பிறவிகளிலிருந்தும்கூடத் தாங்கள் கிருபை கூர்ந்து என்னைக் காப்பாற்ற வேண்டும். உங்களுடைய திருவடிகளையே சரண் அடைகிறேன்'' என்று கூறிப் பிரார்த்தித்துவிட்டு அவரது திருவடிகளில் விழுந்து வணங்கினாள்.

அந்தணர் யோசித்தார். அவருக்கு அவள்மீது இரக்கம் உண்டாயிற்று. 'சாதாரணப் புண்ணியச் செயல்களால் அவளைக் காப்பாற்றுவது முடியாத காரியம். எனவே நான் என் ஆயுளில் இதுநாள் வரையிலும் செய்து வந்த கிருத்திகை விரதத்தின் பலனில் பாதியை இவளுக்கு அளிப்பதுதான் அதற்குச் சிறந்த வழி' என்று எண்ணி, அவளை உட்கார வைத்துப் பன்னிரெண்டெழுத்து மந்திரத்தை ஓதினார். துளசிஜலம் கொண்டு அவளை நீராட்டினார்; பிறகு தாம் நினைத்தபடியே தம் புண்ணியத்தில் பாதியை அவளுக்கு அளித்தார். அது காரணமாக அவள் உடனே தன் பாவம் நீங்கப் பெற்றாள். அத்துடன் ஊர்வசியைப் பழிக்கும் பேரெழில் படைத்த நங்கையாக ஒளிமயமாகக் காட்சியளிக்கலானாள்.

அப்போது விண்ணிலிருந்து ஒரு விமானம் வந்து இறங்கியது. அதிலிருந்து புண்ணியசீலன், சுசீலன் என்ற இருவர் வந்து இறங்கினர். அவர்கள் இருவரும் பகவானின் கணத்தினர். அவர்களைக் கண்டு மிகவும் வியப்படைந்த தர்மதத்தர் அவர்களின் கால்களில் விழுந்து வணங்கினார். கணங்களும் அவரைத் தூக்கி நிறுத்திக் கட்டித் தழுவிக்கொண்டு அவரைப் போற்றினர்.

''அந்தணரே! தாங்கள் சிறந்த பாக்கியசாலி. எளியவர்கள் மீது இரக்கம் கொண்டு சிறந்த தொண்டு செய்திருக்கிறீர்கள். உங்களது தயவால் இந்தப் பெண்மணி எல்லாப் பாவங்களும் நீங்கப் பெற்றாள். இவள் ஆயுட்காலம் முடியும் வரையில் விஷ்ணுலோகத்தில் இருப்பாள். அதனால் உங்களது புண்ணியம் இரட்டிப்பாகும். ஆகவே நீங்களும் இறந்தவுடன் தங்களுடைய இரண்டு மனைவியருடன் விஷ்ணுலோகம் செல்வீர்கள். அடுத்த பிறவியில் தாங்கள் தசரத மன்னராகப் பிறப்பீர்கள்; உமது இரு மனைவியரும் உமக்கு மனைவியராக அமைவர். உமது புண்ணியத்தில் பாதிப் பங்கைப் பெற்ற இந்தப் பெண்மணி கைகேயி* என்ற பெயரில் உமது மனைவியாவாள். அந்தப் பிறவியில் நீங்கள் கடவுளை மகனாக அடைவீர்கள். அதன் பிறகு மீண்டும் சொர்க்கத்தை வந்தடைவீர்கள்'' என்று கூறிவிட்டு, கணத்தினர் தாங்கள் வந்த வழியே திரும்பிச் சென்றனர்.

---

* பகவானின் கணத்தினர் சொன்னபடியே கலகா அடுத்த பிறவியில் கேகயன் மகளாகப் பிறந்து தசரத மன்னனின் மனைவியானாள். ஆயினும் அவளது அரக்கத்தன்மை மிச்சம் இருக்கவே ராமனைக் காட்டுக்கு அனுப்பச் செய்தாள்.

—பத்மபுராணம்



சடையும் குழலும்

வாகீசகலாநிதி கி. வா. ஜகந்நாதன்

சிவபெருமான் தனக்குள் அம்பிகையை அடக்கித் தான் ஒருவனாகவே காட்சி கொடுக்கும் கோலமும் உண்டு; அன்னையை இடப் பாதியில் அமைத்து இரண்டுருவம் ஒன்றாக இணைந்து அர்த்த நாரீசத் திருக்கோலத்தில் விளங்குவதும் உண்டு; தனியே அம்பிகையை அமரவைத்து இடபத்தின் மேல் ஊர்ந்து வரும் இடபாரூடர் என்ற திருக்கோலமும் அவனிடம் உண்டு; இவற்றிற்கு மேல் இடையிலே கந்தவேளை இருத்திக்கொண்டு இரு புறமும் அம்மையப்பனாக எழுந்தருளும் கோலம் ஒன்று உண்டு; அந்தத் திருக்கோலத்தில் இறைவனைச் சோமாஸ்கந்தர் என்று சொல்வார்கள். ஒன்றை அடக்கிய ஒன்று, இருபாதியாகிய ஒன்று, தனிவேறு இரண்டு, மூன்று என்று வடிவங்களைக் காட்டும் மூர்த்திபேதங்கள் இவை.

"பெண்உரு ஒருதிறன் ஆகின்று; அவ்வுருத்
தன்னுள் அடக்கிக் கரக்கினும் கரக்கும்"

என்று புறநானூற்றில் வருகிறது. அர்த்தநாரீசத் திருவுருவத்தையும் இறைவியை உள்ளடக்கிய தனிக் கோலத்தையும் அந்த அடிகள் குறிக்கின்றன.

இவற்றில் அர்த்தநாரீசக் கோலத்தை மாதிருக்கும் பாதியன் என்று மணிவாசகர் பாடுவார். திருச்செங்கோட்டில் அந்த மூர்த்தி எழுந்தருளியிருக்கிறார்.

"நீல மேனி வாலிழை பாகத்து ஒருவன்"

என்று சங்க நூலாகிய ஐங்குறுநூறு இத் திருவுருவத்தைச் சுட்டிச் சொல்கிறது.

சிவபெருமானிடம் அவனருளே சக்தி வடிவமாக இருக்கிறது.

"அருளது சத்தி யாகும் அரன்றனக்கு"

என்று சாஸ்திரம் கூறுகிறது. சிவபெருமான் திருவுருவத்தில் நூற்றுக்கு நூறு பங்கு அருள் நிரம்பியிருக்கிறது. சக்தனாகிய அவன் வடிவத்துக்குச் சமானமான அளவில் சக்தி இடம்பெற்றிருக்கிறாள் என்பது இந்தக் கருத்தையே காட்டுகிறது.

திருஞானசம்பந்தர் சமணர்களுடன் வாதிடச் செல்லும்போது சிவபெருமானுடைய கருணையை வேண்டுகிறார். அவரை மாதிருக்கும் பாதியனாக எண்ணி வணங்குகிறார்.

"வேத வேள்வியை நிந்தனை செய்துழல்
ஆதம் இல்லி அமணொடு தேரரை
வாது செய்ந்த நிக் கத்திரு வுள்ளமே,
பாதி மாதுடன் ஆய பரமனே."

இவ்வளவு சிறப்புடைய பாதிமாதுடனாகிய பரமனை இப்போது நினைத்துப் பார்க்கிறார், காரைக்கால் அம்மையார்.

சிவபெருமான் அந்திவானத்தில் தோன்றும் செந்நிறம் போன்ற திருமேனியை உடையவன். "சிவனெனும் நாமம் தனக்கே உடைய செம்மேனியம்மான்" என்று திருநாவுக்கரசர் பாடுவார். அம்மையார்,

செக்கர்போல் ஆகத்தான்

என்கிறார். செக்கர்—அந்திச் செவ்வானம். அவனுடைய சடாபாரமும் சிவப்புத்தான். நெருப்புக் கொழுந்து போல அது தோன்றும். மிகுதியாக நெருப்பு எரியும்போது சடசட என்ற ஒலி எழும்பும். அப்போது அதன் ஜ்வாலை மேலே துள்ளி எழும். தீக்கொழுந்து என அதைச் சொல்வார்கள். சிவபெருமானுடைய திருமேனியைக் கண்டு அவன் சடைமுடியைப் பார்த்தால் எரிமிக்கு முழங்கி எரியும் போது தோன்றும் சுடர்க் கொழுந்து போல இருக்கும்.

இறைவன் திருச்சடை நெருப்புக் கொழுந்து போலத் தோன்றுவதைக் கண்ட அம்மையார் இடப் பாகத்தைப் பார்க்கிறார். அர்த்தநாரீசக் கோலத்தில் அல்லவா இப்போது அவர் அகக்கண் பதிந்திருக்கிறது? அதில் வலப்பாகத்து முடியைப் பார்க்கையில் அங்கே எரியின் கொழுந்து போலச் சடை தெரிகிறது. உடனே வாம்பாகத்தைப் பார்க்கிறார்.

அங்கே ஒரு பாதியாக அம்பிகை இணைந்திருக்கிறாள்.

அந்த இடப்பக்கத்துத் திருமுடியைப் பார்க்கிறார். அம்பிகையின் கூந்தல் கன்னங்கரியது. இருளெல்லாம் செறிந்து ததும்பி நின்றது போல அந்தக் கூந்தல் தோற்றம் அளிக்கிறது. இறைவியின் கூந்தலுக்கு மேகத்தை உவமை சொல்லலாம்; பாசியை உவமிக்கலாம்; மயில்தோகையை உவமையாக்கலாம்; மையைச் சொல்லலாம். ஆனால் அம்மையாருக்கு அந்த உவமைகள் நினைவில் வரவில்லை. செக்கச் செவேல் என்ற சடையும் கன்னங்கரேல் என்ற குழலும் ஒன்றுக்கு ஒன்று நேர்மாறான வண்ணம் உடையவை. நெருப்புக் கொழுந்தைச் சொன்னவர் அதனோடு தொடர்ந்து நினைவுக்கு வரும் இருட்டை உவமை யாக்குகிறார். நள்ளிருளில் ஈமத்தில் அழல் கொழுந்து விட்டு எரியும்போது கூத்தாடும் ஐயனை வணங்குகிற அவருக்கு எரியும் இருளும் அடுத்தடுத்தே நினைவுக்கு வருகின்றன. அவரே நள்ளிருளில் இறைவனோடு கூத்தாடும் பேய்க்கணத்தில் ஒருவராக ஆனவர் அல்லவா?

அம்பிகையின் குழலினிடையே பூவை அணிந்திருக்கிறாள். அது பூங்குழல். இருட்டிலே நட்சத்திரம் ஒளிர்வதைப் போல அது ஒளிர்கிறது.

இறைவனுடைய திருச்சடையும் அவன் பாகத்தில் இணைந்திருக்கும் அம்மையின் பூங்குழலும் ஒருசேரப் பார்த்தால் எப்படி இருக்கின்றன? 'தீக்கொழுந்தும் அடர்ந்த இருளும் போல இருக்கின்றன அல்லவா?' என்று கேட்கிறார், காரைக்கால் அம்மையார்.

> **மிக்க முழங்கெரியும் வீங்கிய பொங்கிருளும்**
> **ஒக்க உடன் இருந்தால் ஒவ்வாதே?—செக்கர்போல்**
> **ஆகத்தான் செஞ்சடையும் ஆங்குஅவன்றன் பொன்உருவில்**
> **பாகத்தான் பூங்குழலும் பண்பு.**

[அந்திச் செவ்வானத்தைப் போலுள்ள திருமேனியை உடைய சிவபெருமானுடைய செந்நிறமான சடையும், அங்கே அவனுடைய பொலிவு பெற்ற திருவுருவத்தில் இடப்பாகத்திலுள்ள அம்பிகையின் பூவை அணிந்த கருங்குழலும் தோற்றுவிக்கும் இயல்பு, மிகவும் அதிகமாகப் பொங்கி முழங்கும் நெருப்புக் கொழுந்தும், மிகுதியாக அடர்ந்துள்ள இருளும் ஒருங்கே உடன் இருந்தால் எப்படியோ அப்படி ஒத்திராதோ?

மிக்க எரி, முழங்கு எரி என்று தனித்தனியே கூட்டுக. வீங்கிய-மிகுதியான. பொங்கு-செறிந்து ததும்பும். ஒவ்வாதே-ஒவ்வாதோ; வினா. செக்கர்-அந்திச் செவ்வானம். ஆகம்-திருமேனி. பொன் உரு-பொலிவு பெற்ற வடிவம்; செம்பொன்னைப் போன்ற வடிவம் என்றும் சொல்லலாம்.

பண்பு ஒவ்வாதோ என்று முடிக்க வேண்டும்.]

அற்புதத் திருவந்தாதியில் 58-ஆம் பாடல் இது. ☆

நம்பிக்கையே நமது வாழ்வு; அது என்றும் வெற்றி தரும்.

—யஜுர்வேதம், 2-10

பிரபஞ்சத்தின் முதற் காரணம் பிரம்மத்தைத் தவிர வேறு எதுவுமில்லை. ஆகவே பிரபஞ்சம் பிரம்மமே ஆகும்.

—ஆதி சங்கரர்

ஒரு ஜைன முனிவர் கூறியது போல, அகிம்சையைவிட உண்மையினிடத்தில் எனக்குப் பக்தி அதிகம்.

—காந்தியடிகள்

இன்பமும் துன்பமும் இதயத்திலேயே முளைப்பன. உலகம் என்பது நாம் ஆக்குவது போலவே ஆகும்.

—ஷிண்டோ மதம்

சரீரத்தில் புண் ஏற்பட்டால் மருந்து போட்டு ஆற்றினாலும் ஆறிய வடு சிறிது காலம் இருக்கிறது. அது போலப் பகவந்நாம கீர்த்தனத்தால் பாவம் ஒழிந்தாலும், அதன் வாசனை மட்டும் கொஞ்ச நாள் இருந்து, பிறகு அதுவும் அழிந்துவிடும்.

—ஸ்பானியப் பழமொழி

நெய் எவ்வளவு உருகினாலும் சற்று நேரத்துக்கெல்லாம் தோய்ந்துவிடுகிறது. அது போல் பக்குவம் இல்லாதவர்களின் மனம் எவ்வளவு உருகினாலும் அடிக்கடி தோய்ந்து போய்விடும்.

—முகமது நபிகள்

அதிகம் பேசுகிறவர்கள் சிந்திப்பதில்லை. மௌனம் என்பது உரையாடல் கலையில் சிறந்த ஒன்றாகும்.

—க்ளீரோ

சிவ தரிசனம்

சகோதரி நிவேதிதை

உலக வாழ்க்கை, மனைவி, மக்கள், சுற்றம் இவை அனைத்தும் மேலும் மேலும் ஜீவனைப் பந்தப் படுத்திக்கொண்டே போகின்றன. உலகப் பொருள் களினால் மனிதன் திருப்தியடைவது போலத் தோன்றினாலும், உண்மையில் அவை அவனுக்கு மனநிறைவையும் ஆனந்தத்தையும் அளிப்பதில்லை. அவை இல்லாவிட்டாலும் மனிதன் உயிர்வாழ முடியும்; உலக வாழ்க்கை நடைபெறும். இந்தக் கருத்தை விளக்குவதற்காகவே இந்தியாவின் முதற் கடவுளாகிய சிவபெருமானை ஒன்றுமில்லாத பிச்சாண்டியாக உருவகப்படுத்தி இந்துக்கள் வணங்கி வருகின்றார்கள்.

அந்தச் சிவன் தம் ஹோமகுண்டத்திலிருந்து எடுத்த விபூதியைத் தம் உடல் முழுதும் பூசிக் கொண்டிருக்கிறார். ஆகவே வெண்மையான நிறம் கொண்டவர் போலக் காட்சியளிக்கிறார். அவ ருடைய அடர்ந்த தலைமுடி பனியாலும் வெப்பத் தாலும் பாதிக்கப்படாமல் புதர் போல நீண்டு வளர்ந் திருக்கிறது. அவருடைய அழகான கண்கள் பாதி மூடிய நிலையில் இருக்கின்றன. சுவாசிக்கும் நேரத்தில் உலகம் உண்டாக்கப்பட்டாலும் உடனே அது அழிக்கப்பட்டாலும், அதனால் அவர் எவ் விதத்திலும் பாதிக்கப்படாமலும், அவை பற்றிச் சிறிதும் கவலைப்படாமலும், தம் போக்கில் நிறை ஞானியாகவும் எல்லா மனிதர்களிடமிருந்தும் விடு பட்டும் தனிமையில் அமைதியாக மகாசமாதியில் ஆழ்ந்திருக்கிறார். உலகில் நடைபெறும் தோற்றங் களும் அழிவுகளும் அவருடைய கண்முன் சொப் பனம் போலத் தம் போக்கில் நிகழ்ந்துகொண்டிருக் கின்றன. இவ்விதம் எல்லாச் செயல்களும் நடை பெறுவதற்கு ஆதாரமாகவும் ஆதிமூலமாகவும் விளங்கும் சிவபெருமான், அந்தச் செயல்களால் எந்தவித மாற்றமும் இல்லாமல் எல்லாப் புலன் களையும் உள்முகமாகத் திருப்பி ஆழ்ந்த தியானத்தில் அமர்ந்திருக்கிற அழகுதான் என்னே! அவருடைய பாதி மூடியுள்ள இரண்டு கண்களுக்கு மேல் நெற்றியின் நடுவில் ஒரு கண் இருக்கிறது. அது மூன்றாவது கண்; அதுதான் ஞானக் காட்சிகளைக் காண்கிறது.

ஒருவராலும் விரும்பப்படாமல், ஆனால் எல்லாரும் தன்னைக் கண்டு பயந்து ஓடும் நிலையில் இருப்பது பாம்பு; அத்தகைய பாம்பு, சிவபெருமானின் அழகிய கழுத்தைச் சுற்றி இருப்பதைப் பார்க்கும்போது அவர்தாம் எல்லா விலங்குகளுக்கும் அடைக்கலம் தரும் சபாபதியாக விளங்குகிறவர் போல இருக் கிறார். அபயகர்த்தராகிய சிவன் விலங்குகளை மட்டு மின்றி மனிதர்களில்கூட யாரையும் வெறுக்கவோ ஒதுக்கவோ மாட்டார். மற்றவர் வெறுக்கும் பித்தர், பேயர், பிசாசர், உன்மத்தர், ஊனமுற்றோர் முதலிய வர்களுக்கும் அடைக்கலம் அளித்து ஆதரிப்பவர் அவர். அதனால்தான் அவரும் பித்தர் என்று அழைக்கப்பட்டாரோ?

இத்தகைய அழகிய சிவபெருமான் உலகில் அனை வரும் கண்டு மருளும் துன்பங்களையும் துயரங் களையும் தாமே ஏற்றுக்கொள்வார். மற்றவர்களால் ஒதுக்கப்பட்ட எல்லாவற்றையும் தாமே ஏற் பதனால் அவர் தியாகேசர் ஆகிறார்.

ஒரு சமயம் பாற்கடலைத் தேவர்களும் அசுரர் களும் கடைந்தார்கள். அப்போது வெளிவந்த ஆலகால விஷத்தைக் கண்டு தேவர்கள் திகைத் தனர். அசுரர்கள் அச்சமுற்றனர். ஆனால் யாராவது ஒருவர் அந்த விஷத்தை ஏற்றுத்தானே ஆக வேண்டும்? நம் தியாகேசரான சிவபெருமான் அந்த விஷத்தைத் தாமே ஏற்று, அதனால் எப்போதும் நீலமயமாக விளங்கும் கழுத்தையுடைய நீல கண்டரானார்.

இத்தகைய நீலகண்டரின் சொத்துக்கள்தாம் என்ன தெரியுமா? வாகனமாகப் பயன்படுத்த ஒரு வயதான காளை மாடும், மகாதியானத்தில் அமர் வதற்காக ஒரு புலித்தோலும், ஜபத்திற்காக ஒரு ஜபமாலையுமே சொத்தாக அவர் வைத்திருக்கிறார்.

இத்தகைய தியாகேசர் நீலகண்டர் பசுபதி சிவ பெருமானை நாம் எளிதில் அடைந்துவிடலாம். ஆனால் அதற்கு வேண்டிய தூய மனதுடன் வில்வ இலைகளுடன் அபிஷேகம் செய்து ஆராதனையும் செய்தால், அவர் மனமகிழ்ந்து தம் பக்தனைத் தடுத்தாட்கொள்கிறார்.

நாம் உலகில் பல பொருள்கள் கிடைக்க வில்லையே என்று கஷ்டப்படுகிறோம். கிடைத்த

வற்றை எப்படிச் சேமித்துப் பாதுகாப்பது என்று நினைத்து வேதனைப்படுகிறோம். ஆனால் சிவ பெருமானோ எல்லாவற்றிலுமிருந்து முற்றும் விடுபட்டவராகவும், எல்லாவற்றையும் துறந்தவராகவும், கருணையே வடிவெடுத்தவராகவும், அறியாமையை அழிப்பவராகவும் தம் போக்கில் என்றும் நிலையாக இருக்கும் பரம்பொருளில் கலந்து ஆழ்ந்த தியானத்தில் இருக்கிறார்.

இப்படிப்பட்ட சிவபெருமானை, இந்திய மக்கள் எப்படி நாள்தோறும் போற்றிப் புகழ்ந்து தியானித்து வருகிறார்கள் என்பதைப் பின்வரும் பாடலினால் அறியலாம் :—

''இறைவா!
எங்களை உண்மையில்லாத நிலையிலிருந்து உண்மையான நிலைக்கு அழைத்துச் செல்.
இருளிலிருந்து ஒளிமயமான நிலைக்கு அழைத்துச் செல்.
மரணத்திலிருந்து மரணமிலாப் பெருவாழ்விற்கு அழைத்துச் செல்.
என்னுள்ளே புகுந்து என்னுடன் கலந்துவிடு.
உன் கருணைப் பார்வையினால் எங்களை
அறியாமையிலிருந்து காத்திடுக!''

ஆன்மிக உரையாடல்

சுவாமி துரியானந்தர்

சீடர்: ஒருவன் இறைவனை நோக்கி முன்னேறிக்கொண்டிருக்கிறான் என்பது எப்படித் தெரியும்?

சுவாமி துரியானந்தர்: ஒவ்வொருவரும் அதைத் தன்னால் அறிந்துகொள்ள முடியும். மற்றவர்களும் அதை அறிய முடியும். (பகவானை நோக்கி முன்னேறுகிற) ஒருவனின் எல்லா உணர்ச்சி வேகங்களும்—காமம், குரோதம், லோபம் முதலிய யாவும்—தேய்ந்தவாறிருக்கும்; இந்திரிய விஷயங்களில் அவனது பற்றுக் குறையும்; அவனுடைய இதயத்தில் சாந்தி நிலவும்.

சீடர்: மகராஜ், கடவுளைச் சாட்சாத்கரிப்பதற்கு முன்பே ஒரு மனிதனுக்குச் சாந்தி ஏற்பட முடியுமா?

சுவாமி துரியானந்தர்: முடியாது. உண்மையான சாந்தி என்பது எட்டத்தே உள்ள வஸ்து. ஆனால் விஷயானுபோகங்களில் ஒருவனுக்கு விருப்பம் மேன்மேலும் குறைவதாகவும், அவனது பிரேமை எல்லா உயிர்களிடமும் வளருவதாகவும் காண்பாயாகில் (அவனுக்குப் பூர்ண சாந்தி கூடா விடினும்) அவன் பகவானை நோக்கி முன்னேறுகிறான் என்று நீ புரிந்து கொள்ளலாம். வெறுமனே பகவந்நாமாவை ஜபித்துக் கொண்டிருந்தால் மட்டும் போதாது. பற்று என்ற ஒரு துவாரம் மனதில் இருக்குமேயானால் ஜபத்தினால் பெறக்கூடிய பலனும் அந்தத் துவாரத்தின் வழியே ஒழுகித் தீர்ந்துவிடும். நாளெல்லாம் ஒருவன் வயலுக்கு நீர் பாய்ச்சினானும்; ஆனால் மாலையில் அத்தனை நீரும் ஓர் உடைப்பு மூலம் ஓடிவிட்டதைப் பார்த்தானும்; ஒரு சொட்டுக்கூட நிலத்தில் நிற்கவில்லையாம்.

இவ் விஷயமாக நாக மஹாசயரின் அருமையான கூற்று ஒன்று எனக்கு நினைவு வருகிறது. நான் அவரது வீட்டுக்குப் போயிருந்தேன். அவரது தந்தை ஒரு மூலையில் ஜபம் செய்துகொண்டிருந்தார். நாக மஹாசயர் என்னிடம், ''என் தந்தைக்கு உண்மையான தெய்வபக்தி உண்டாவதற்கு ஆசி கூறுங்கள்'' என்றார். ''அவருக்குத்தான் ஏற்கனவே அது உள்ளதே! அவர்தாம் எப்போதும் பகவந்நாமாவை ஜபிக்கிறாரே! இதற்கு மேல் என்ன வேண்டும் என்கிறாய்?'' என்று நான் பதில் சொன்னேன். அதற்கு மறுதலிப்பாக நாக மஹாசயர், ''நங்கூரம் பாய்ச்சி நிறுத்தப்பட்ட படகைத் துடுப்புப் போட்டு வலிப்பதால் என்ன பயன்? என் தந்தைக்கு என்னிடம் மிக்க அதிகமாகப் பற்று உள்ளது. (எனவே) அவருடைய ஜபம் என்ன நற்பயனைத் தர முடியும்?'' என்றார். ''உங்களைப் போன்ற ஒரு பிள்ளையிடம் அவர் அன்பு வைக்கக் கூடாதெனில் வேறு யாரிடம்தான் அன்பு கொள்ள வேண்டும்?'' என்றேன். ''அப்படிச் சொல்லாதீர்கள், அப்படிச் சொல்லாதீர்கள்'' என்று அரற்றிய அவர், ''அவருக்கு என்னிடமுள்ள பற்றுதல் அனைத்தும் போகும்படியாக ஆசீர்வதியுங்கள்'' என்றார்.

ஆகா! நாக மஹாசயர்தாம் எத்துணை பெரியவர்! 'நங்கூரம் பாய்ச்சிய படகை வலிப்பது' என்பதன் முழு அர்த்தம் உனக்குத் தெரியுமோ? இருண்ட இரவொன்றில் சில குடிகாரர்கள் ஒரு படகுப் பயணம் செய்ய எண்ணினர். ஆற்றங் கரைக்குப் போனார்கள். ஒரு படகில் ஏறி உட்கார்ந்து கொண்டார்கள். அப்படியே துடுப்பை வலிக்கத் தொடங்கிவிட்டார்கள். பொழுது விடிந்தது. நாம் பயணத்தை எங்கே தொடங்கினோமோ அதே இடத்தில்தான் இன்னமும் இருக்கிறோம் என்று கண்டனர். குடிபோதையில் அவர்கள் படகை நங்கூரத்திலிருந்து விடுவிக்கவே இல்லை!

அக்டோபர் 12

சுவாமி துரியானந்தர் தமது அறையில் அமர்ந்திருந்தார். சில சன்னியாசிகளும் கிருகஸ்த சிஷ்யர்களும் உடனிருந்தனர். ''இந்தியா பண்பாடு பெற்றதா?'' (Is India civilised?) என்ற ஸர் ஜான் உட்ராஃபின் நூல் விரிவாக்கப்பட்டு இரண்டாம் பதிப்பாக வெளியாகியிருந்தது. அதைப் பற்றிய உரையாடல் நடந்துகொண்டிருந்தது.

சீடர்: எழுத்துப் பணியில் ஓர் அனுகூலம் உள்ளது. அதில் ஒருவர் சீராக முன்னேறிக் கொண்டே போகலாம். ஒரு நாளைக்கு ஒரு மணி விதம் எழுதிக்கொண்டே போனால் ஓராண்டு முடிவில் கணிசமாக எழுதி முடிக்க முடிகிறது. ஆனால் ஆத்மசாதனை விஷயமோ மாறாக உள்ளது. தினமும் இரண்டு மூன்று மணி தியான ஜபாதிகள் செய்தாலும், பத்து நீண்ட வருடங்களுக்குப் பிறகுங் கூடக் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எதுவும் தெரியக் காண்பதில்லை. தொடங்கிய இடத்திலேயே இருப்பது போலத்தான் தோன்றுகிறது.

சுவாமி துரியானந்தர்: என்ன சொன்னாய்? ஆத்மசாதனை ஒரு பயனும் தருவதில்லை என்று எவன் சொன்னது? நிச்சயம் பயன் தருகிறது. அதைப்பற்றிச் சந்தேகத்தின் நிழல்கூட இல்லை.

உலக மக்களுக்காக உழைத்தாயானால் அவர்கள் கூலி கொடுக்கிறார்கள். ஈச்வரனுக்காகச் செய்யும் பணிகளுக்குப் பிரதி செய்யாமலிருக்க அவன் என்ன, அத்தனை கருணையற்றவனா? ஆனால் நீ சரியான மனோபாவத்தோடு பணி செய்ய வேண்டும். தாறுமாறாகச் செய்வது பலிக்காது. சாராயச் சாலை அருகே ஒரு பைத்தியக்காரன் வசித்தான். தினந்தோறும் நண்பகலில் அவன் அங்கே போய், சாராயம் காய்ச்சிய பானைகளில் உபயோகமற்றவை என்று எறியப்பட்டவற்றை ஒரு தடியால் ஒவ்வொன்றாக உடைப்பான். இதில் ஒரேயடியாக வேர்த்துக் கொட்டிக்கொண்டு, ''ஐயோ! என்னால் இனி வேலை செய்ய முடியாது'' என்று கூக்குரலிடுவான். சிறிது நேரம் ஓய்வு எடுத்துக்கொள்வான். மறுபடி (உடைப்பு வேலையை) ஆரம்பித்து விடுவான்.

இது போன்ற முறையில் நீ உழைத்தால் பயனில்லை. நாளெல்லாம் நீ வயலுக்கு நீர் பாய்ச்சலாம்; ஆயினும் வரப்பில் ஓர் உடைப்பு இருந்தால் அத்தனையும் வியர்த்தம்தான். மாலை வயலுக்குச் சென்று பார்த்தாயானால் ஒரு சொட்டு நீர்கூட நிலத்தில் தங்காமல் ஓட்டை வழியே ஓடிவிட்டதெனக் காண்பாய். இந்திரிய விஷயங்களில் ஆஸக்தி (அடிமைப்பட்டிருப்பது) என்பதுதான் அந்த ஓட்டை.

சீடர்: ஓட்டையை நாம் கண்டுபிடிக்க முடியாவிட்டால் என்ன செய்வது மகராஜ்? அனைத்தும் குரு கிருபையைச் சார்ந்தே நிற்கிறது. ஸ்ரீராம கிருஷ்ணர் சொன்னார்: ''புரி ஜகந்நாதரின் ஆலயத்துக்குப் போகிற ஒரு யாத்திரிகர் தவறுதலாக வேறு வழியில் சென்றுவிட்டால், வேறு எவரேனும் உடனேயோ, காலம் தள்ளியோ, எவ்வாறேனும் நிச்சயமாக அவருக்குச் சரியான வழியைக் காட்டி விடுவார்கள்.'' ஈச்வரனைத் தேடும் சாதகன் தவறான வழியைப் பின்பற்றினாலும், அவனது இலக்கு ஈசனை அடைவது என்கிற வரையில் உறுதியானது. எனவே அவனது உழைப்பு ஏன் வீணாக வேண்டும்?

சுவாமி துரியானந்தர்: இல்லை, உழைப்பு வீண் போகாது—அவன் மட்டும் உண்மையாகவே ஈச்வரத் தேட்டத்தில் இருப்பானாகில். அப்படிப்பட்டவன் என்றோ ஒரு நாள் ஈச்வரகிருபையின் அடையாள அனுபவத்தைப் பெறுவது நிச்சயம். 'ஒருவன் பகவானை நோக்கி ஓர் அடி வைத்தால் பகவான் பத்தடி நெருங்கி இவனிடம் வருகிறான்.' இப்படிச் சொல்வது வீண் பேச்சல்ல. ஈச்வரகிருபையைப் பெறச் சிறிதேனும் முயன்ற எவனாயினும் இதனை அனுபவத்தில் கண்டிருப்பான். (ஏ-யின் புறம் திரும்பி) என்ன சொல்கிறாய்?

ஏ: ஆம், ஐயா. நிச்சயமாக ஆண்டவன் இப்படிச் செய்கிறான்.

சுவாமி துரியானந்தர்: சத்தியம், கீழ்ப்படிதல், பெண்டிர் அனைவரையும் தாயாகப் பார்ப்பது இவை ஒருவனை ஹரியிடம் அழைத்துச் செல்லாவிட்டால், அதற்குத் துளசியே பொறுப்பாளி*. (அதாவது, துளசிதாசரே இதற்குப் பொறுப்பேற்றுத் தண்டனையை ஏற்றுக்கொள்வார் என்று அர்த்தம். அவ்வளவு உறுதியாக இவை ஒருவனை ஹரியிடம் சேர்ப்பிக்கும் என்பது கருத்து.) ஆனால் பரிதாபம்! எவரும் உண்மை பேசுவதில்லை. கீழ்ப்படிதல் என்றால் என்ன? பூரணமாகத் தனது என்பதை விட்டுவிடுவதுதான். இதோடு, ஒருவன் பிறன் மனைவியை மாதாவாகப் பார்க்க வேண்டும். இந்தப் பாங்குகள் கொண்ட எவனும் இறைவனை அடைவான் என்பதற்குத் துளசி(தாசர்) ஜாமீன் தருகிறார்.

★

* துளசிதாசரின் வாக்கு.



பழைய சாதம்

வெகு காலத்திற்கு முன்பு வட இந்தியாவில் சிராவஸ்தி என்ற ஒரு நகரம் இருந்தது. அந்த நகரத்தின் தலைவராகிய பிரசாத் பெரிய பணக்காரர்.

பிரசாத் ஒரு நாள் அறுசுவையுடன் பகலுணவு சாப்பிட்டுக் கொண்டிருந்தார். அப்போது அவருடைய மருமகள் சத்தியா மாமனாருக்கு உணவு பரிமாறிக்கொண்டிருந்தாள். அதே சமயம் ஒரு துறவி வீட்டின் கதவருகே வந்து, ''அம்மா, பிக்ஷை இடுங்கள்'' என்று கேட்டார்.

துறவி கேட்டது ஸ்ரீமான் பிரசாத் அவர்களின் காதில் விழத்தான் செய்தது. ஆனால் அவர் அதைக் கவனித்ததாகவே காட்டிக்கொள்ளாமல் சாப்பிடுவதில் முனைந்திருந்தார். சத்தியாவிற்கு மாமனாரின் கருமித்தனம் நன்கு தெரியும். அவள் சாதுவுக்குப் பிக்ஷையிட மனதார விரும்பினாள். ஆனால் அவள் விரும்பி என்ன செய்வது? வெறும் கையால் முழம் போடவும் ஆயிரம் முறை யோசிப்பவர், எச்சிற் கையாலும் காக்காய் ஓட்டாதவர்—அப்படிப்பட்ட 'அருமை' மாமனாருக்குப் பரிமாறிக்கொண்டும் விசிறிக்கொண்டும் இருந்ததனால் சத்தியா துறவிக்குப் பிக்ஷையிட இயலாத நிலையில் இருந்தாள்.

துறவி, வீட்டில் உள்ளவர்களுக்குத் தாம் கூப்பிட்டது காதில் விழவில்லை போலும் என்று நினைத்து, இரண்டாம் முறை சற்று உரக்கவே குரல் கொடுத்தார். அப்போதும் நகரசபைத் தலைவர் மௌனமாகவே சாப்பிட்டுக்கொண்டிருந்தார். அவருடைய உத்தரவு இல்லாத நிலையில் சத்தியாவினால் துறவிக்குப் பிக்ஷையிட இயலவில்லை.


துறவி நேரத்தை வீணாக்காமல் வேறு எங்காவது சென்றாலும் பிக்ஷை கிடைக்குமே என்று நினைத்த சத்தியா, ''ஐயா, எங்கள் வீட்டுத் தலைவரே இப்போது பழைய சாதம்தான் சாப்பிட்டுக்கொண்டிருக்கிறார். நீங்கள் வேறு இடம் சென்று பிக்ஷை கேட்டுப் பாருங்கள்'' என்று சொல்லிவிட்டாள். பாவம், அவளால் வேறு என்ன செய்ய முடியும்? வீட்டிலிருந்து குரல் வந்ததும் துறவி அங்கிருந்து சென்றுவிட்டார்.

சத்தியா சொன்னதைக் கேட்டாரோ இல்லையோ, நகரசபைத் தலைவருக்கு அசாத்தியக் கோபம் பொங்கியது. ''நான் பணக்காரன், எத்தனை பெரிய அந்தஸ்தில் இருப்பவன் என்பதெல்லாம் ஊர் முழுவதும் பிரசித்தம். அப்படிப்பட்ட நான் இவ்வளவு பெரிய விருந்தைச் சாப்பிட்டுக்கொண்டிருக்கும் போது பழைய சாதம் சாப்பிடுகிறேன் என்று ஏன் சொன்னாய்? நீ சொன்னதற்கு என்ன அர்த்தம்? என்னை அவமானப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில்தான் இப்படிச் சொல்லியிருக்கிறாய். என்ன திமிர் இருந்தால் இப்படிப் பேசுவாய்? உனக்கு இனியும் இங்கே இடமில்லை. உடனே, இப்போதே, இந்த நிமிடமே என் வீட்டை விட்டு நீ வெளியே போய்விட வேண்டும்'' என்று படபடப்புடன் குதியாய்க் குதித்துப் பரதநாட்டியம் ஆடினார்.

சத்தியா சாந்தசொரூபி. அவள் அமைதியாக, ''தேவரீர் சொல்வது போல இங்கிருந்து போக எனக்கு ஓர் ஆட்சேபமும் இல்லை. ஆனால் ஒரே

பிரம்மசாரி நிரஞ்ஜன சைதன்யா

ஒரு விஷயம்: என்னை மருமகளாக ஏற்றுக்கொள்ளு முன்பு தாங்கள் அளித்த வாக்குறுதியை மட்டும் நினைவுபடுத்த விரும்புகிறேன். 'நான் ஏதாவது தவறு செய்தால் அதை எட்டுப் புத்திமான்களிடம் தெரிவித்து அவர்களின் யோசனையின் பேரிலேயே எனக்குத் தண்டனை தர வேண்டும்' என்று சொல்லி யிருக்கிறேன். தாங்களும் அந்த நிபந்தனையின் படியே செய்வதாக வாக்குறுதி கொடுத்துத்தான் என்னை மருமகளாக ஏற்றுக்கொண்டிருக்கிறீர்கள். இப்போது உங்கள் வாக்குறுதியின்படி எட்டுப் புத்தி மான்களிடம் விஷயத்தைச் சொல்லி, அவர்க ளுடைய யோசனையைக் கேட்டபிறகு என்னைத் தண்டியுங்கள்'' என்று சொன்னாள்.



எப்படியோ தாம் கொடுத்த வாக்குறுதியை நிறை வேற்ற வேண்டும் என்ற எண்ணம் பிரசாத்திற்குத் தோன்றியது. ஆகவே அவர் மருமகளின் கோரிக் கைக்கு இணங்கி, எட்டுப் புத்திமான்களை வர வழைத்து விஷயத்தை விளக்கினார்.

புத்திமான்கள் சத்தியாவிடம், ''ஏனம்மா நீ உன் மாமனாரை இப்படி அவமானப்படுத்தினாய்? அப் போதுதான் சமைத்த அறுசுவை உணவை அவர் சாப்பிட்டுக்கொண்டிருந்தபோது பழைய சாதம் சாப்பிடுகிறார் என்று நீ ஏன் சொன்னாய்?'' என்று விசாரித்தார்கள்.

சத்தியா தான் அவ்விதம் சொன்னது சரிதான் என்பதற்கு ஓர் அருமையான விளக்கம் தந்தாள். அந்த விளக்கம் நாம் தெரிந்துகொள்ள வேண்டிய, நம் மனதில் பதிய வேண்டிய ஒன்றாகும். அவள் தந்த விளக்கம் இதுதான்: ''பெரியோர்களே! ஒரு வன் தான் பூர்வஜன்மத்தில் செய்த புண்ணியத்தின் பலனாகவே பணக்காரனாகப் பிறக்கிறான் என்று சான்றோர்களின் மூலமும் சாஸ்திரங்களின் மூலமும் நாம் கேட்டிருக்கிறோம். அதன்படி என் மாமனார் தமது முற்பிறவியில் செய்த புண்ணியத்தையே இப் போது பணக்காரராக இருந்து அனுபவித்து வருகி றார். ஏனெனில், இந்தப் பிறவியிலோ அவர் எந்த ஒரு புண்ணிய கர்மாவையும் செய்ததில்லை என்பதை அவரும் அறிவார், நீங்களும் அறிவீர்கள், ஊரும் உலகமும் அறியும். தமது பூர்வ புண்ணியத்தா லேயே இப்போது அவர் அறுசுவையுடன் உண்ணும் நிலையில் இருக்கிறார். அதையே நான் பழைய சாதம் என்று குறிப்பிட்டேன். இந்தப் பிறவியில் செய்த புண்ணிய பலனைச் செல்வராக இருந்து அதை அவர் அனுபவிப்பவராக இருந்தால் அதையே புதிய சாதம் என்று சொல்வது பொருந் தும். ஆகவே நான் பழைய சாதம் என்று அவ ருடைய இப்போதைய நிலையைக் குறிப்பிட்டது சரியே அல்லவா?''

புத்திமான்கள் சத்தியா சொன்ன விளக்கத்தைக் கேட்டார்கள். அவள் சொன்னது முற்றிலும் சரியே என்று ஒப்புக்கொண்டார்கள்.

நாம் இப்போது பெற்றுள்ள அறிவு, ஆற்றல், பணம், பதவி, இளமை, நல்வாய்ப்பு ஆகியவற்றுக்கு நாம் பூர்வத்தில் எப்போதோ செய்த நல்வினைகளே காரணம். சட்டியில் உள்ள வரையிலேதான் அகப்பையில் வரும். அது போல, புண்ணியச் செயல்களின் பலன் தீரும் வரையிலேதான் இப்போ தைய வாய்ப்பு வசதிகளுடன் இருந்து வருவோம். அது முடிந்ததும்.........

வாய்ப்புகள் இப்போது கைவசம் உள்ள நிலையில் அவற்றைக் குறித்து நாம் கர்வம் கொள்ளக்கூடாது. மாறாக, அவற்றைக் கொண்டு நமக்கு உண்மை யான நன்மையைத் தரும் செயல்களையும் உலகுக்கு உபகாரமாக அமையும் செயல்களையும் செய்ய வேண்டும். காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளா விட்டால் பின்னால் வருந்துவதைத் தவிர்க்க இய லாது. கண் கெட்டபிறகு, வாய்ப்புகள் கை நழுவியபிறகு, வருந்தும் நிலைக்கு நம்மை நாம் ஆளாக்கிக்கொள்ளக் கூடாது.

அகங்காரமும் போலி பக்தியும் உதவா

இஸ்லாமிய பக்தர் ஒருவர் இருந்தார். அவ ருடைய பெயர் ஹாஜி முகம்மது. அவர் அறுபது தடவை மெக்காவிற்குச் சென்று 'ஹஜ்' எனப்படும் புனித யாத்திரை செய்திருந்தார். நாள்தோறும் அவர்

தவறாமல் முறைப்படி ஐந்துதடவை நமாஸ் படித்து வந்தார்.

ஒரு நாள் ஹாஜி முகம்மது ஒரு கனவு கண்டார். கனவில் அவர், சொர்க்கத்தின் தூதர் கையில் ஒரு தடியை வைத்துக்கொண்டு சொர்க்கத்திற்கும் நரகத்திற்கும் இடையே நின்றுகொண்டிருப்பதைக் கவனித்தார். அந்தத் தூதர் அவ் வழியாக வரும் பிரயாணிகளைத் தடுத்து நிறுத்தி, அவர்கள் செய்துள்ள நன்மை தீமைகளைக் கேட்டறிந்து, அவற்றுக்குத் தக்கபடி சிலரைச் சொர்க்கத்திற்கும் சிலரை நரகத்திற்கும் அனுப்பிக்கொண்டு இருந்தார்.



ஹாஜி முகம்மதின் முறை வந்தது. அவரைக் கண்ட தூதர், "நீ என்ன நல்ல காரியம் செய்திருக்கிறாய்? சொர்க்கத்திற்குச் செல்லும் அளவிற்கு நீ செய்த புண்ணியம் என்ன?" என்று கேட்டார்.

ஹாஜி முகம்மது: நான் அறுபது தடவை 'ஹஜ்' செய்திருக்கிறேன்.

தூதுவர்: அது சரிதான். நீ அறுபது தடவை மெக்கா சென்று வந்தாய் என்பது உண்மைதான். ஆனால் உன்னை யாராவது விசாரிக்கும்போது நீ மிகவும் கர்வத்துடன், 'நான் ஹாஜி முகம்மது' என்று சொல்லிக்கொண்டிருக்கிறாய். இந்தக் கர்வம் காரணமாக நீ அறுபது தடவை செய்த புனித யாத்திரையின் பயன் முழுவதும் நஷ்டமாகிவிட்டது. நீ வேறு ஏதேனும் நல்ல காரியம் செய்திருக்கிறாயா? அப்படிச் செய்திருந்தால் அதைப் பற்றிய விவரத்தை எனக்குச் சொல்.

தேவதூதர் இவ்விதம் கேட்டதும் ஹாஜி முகம்மதின் முகம் வாடிவிட்டது. தாம் சொர்க்கலோக இன்பங்களை அனுபவிக்கும் தகுதி பெற்றவர் என்ற அவரது எண்ணத்தில் இடி விழுந்தது போல் ஆயிற்று. அவர் தம்மைச் சிறிது சமாளித்துக் கொண்டு தேவதூதரைப் பார்த்து நடுநடுங்கும் குரலில், "ஐயா! நான் அறுபது வருடகாலமாக நாள்தோறும் தவறாமல் குறித்த முறைப்படி ஐந்து முறை நமாஸ் படித்து வந்திருக்கிறேன். இந்தப் புண்ணியம்கூட நான் சொர்க்கலோகம் செல்வதற்குப் போதுமானது ஆகாதா?" என்று திக்கித் திணறிக் கேட்டார்.

தூதுவர்: நீ செய்த அந்தப் புண்ணியச் செயலின் குவியல்கூட மண்ணோடு மண்ணாகி விட்டதே!

ஹாஜி முகம்மது (உடல் நடுநடுங்க): அது எப்படி? நான் என்ன குற்றம் செய்தேன்? அத்தகைய தவப்பயன் அழியும்படியாக நான் செய்த தவறு என்ன? தயவுசெய்து கூறுங்கள்.

தூதுவர்: ஒரு நாள் வெளியூரிலிருந்து தர்ம சிந்தனையுள்ள பலர் உன்னைக் காண வந்திருந்தார்கள். நீ அவர்கள் எதிரில் உன் பெருமையைக் காட்டிக்கொள்வதற்காக வழக்கத்தைவிட அதிகமான நேரம் தொழுகை செய்தாய். நீ நமாஸ் படிப்பதைப்பற்றி வந்தவர்கள் உயர்வாக நினைக்க வேண்டும் என்று நீ அப்போது நமாஸ் படித்தது காரணமாக அறுபது ஆண்டுகள் செய்து வந்த ஞானசாதனையின் பயன் முழுவதுமே நஷ்டமாகி விட்டது. கடவுளைக் குறித்துச் செய்யும் தவத்தில் போலித்தனம் கூடாது. வெளிப் பகட்டு உதவாது.

சொர்க்கத்தின் தூதுவனின் பதிலைக் கேட்ட ஹாஜி முகம்மது கேவிக் கேவி அழத் தொடங்கினார். தாம் வாய்விட்டு அழும் குரல் கேட்டு அவரது தூக்கம் கலைந்தது. தூக்கம் கலைந்த பிறகுகூடக் கனவில் நடந்த பேச்சு வார்த்தைகளை நினைத்து நினைத்துப் புலம்பத் தொடங்கினார்.

சிறிது நேரம் சென்ற பிறகு அவர் தம்மை ஆசுவாசப்படுத்திக் கொண்டார். கனவுதானே என்று மனதைத் தேற்றிக்கொண்டார். கடவுள் தம்மீது இரக்கம் கொண்டு, தாம் செய்துவிட்ட தவற்றை உணர்த்தியதாகத் தெளிவு பெற்றார். இறைவனின் கருணையை எண்ணி வியந்தார். அல்லாவிடம் மண்டியிட்டு மன்னிப்புக் கோரினார்.

அன்றுமுதல் அவரிடம் இருந்த கர்வம் தொலைந்தது. அவர் மிகவும் பணிவுடன் நடக்கத் தொடங்கினார். *

காந்தியடிகளின் பொன்மொழிகள்



பொன்மொழிகள்

★ உண்மையைத்தான் நான் கடவுள் என்று தொழுகிறேன். இன்னும் நான் கடவுளைக் காணவில்லை. ஆனால் அவரைத் தேடிக் கொண்டிருக்கிறேன். இப்படித் தேடுவதில், நான் அருமை பெருமையாகப் பேணுகிற எதையும் தியாகம் செய்யத் தயாராக இருக்கிறேன். என் உயிரைக்கூடத் தியாகம் செய்யத் தயாராக இருப்பேன்.

★ நான் கடவுளை நேருக்கு நேராகக் காண விரும்புகிறேன். உண்மைதான் கடவுள் என்று எனக்குத் தெரியும். என்னைப்பொருத்தவரையில் கடவுளை அறியப் பயன்படும் ஒரே சாதனம் அஹிம்ஸை-அன்பு என்பதுதான்.

★ எப்படியோ ஒரு வழியில் கடவுள் நமக்கு உதவிபுரிய வருகிறார். நம்பிக்கையை இழந்துவிட வேண்டாம் என்றும், நாம் அழைக்கும் போதெல்லாம் தாம் வரத் தயாராகயிருப்பதாகவும், ஆனால் நமது நிபந்தனைகளின்படியின்றி, தமது நிபந்தனைகளின்படி வருவதாகவும் அவர் நமக்கு உணர்த்துகிறார். இது நான் கண்ட உண்மை. ஒரு தடவைகூட, கடைசி நேரத்தில் அவர் என்னைக் கைவிட்டது கிடையாது.

★ இந்தப் பரந்த உலகத்தில் யாதொரு உதவியும் ஆதரவும் இல்லாமல் திக்குத் திசை தெரியாது தவிக்கும் இருள் மண்டிய நேரத்திலும், கடவுளுடைய திருநாமத்தின் சக்தி நமக்குத் தெம்பு கொடுக்கிறது. நமது சந்தேகங்களையும், நிர்க்கதியான நிலையையும் தூரத் துரத்திவிடுகிறது.